# இந்து ஒளி

HINDU OLI

தீபம்: 21 சுடர்: 2



மாத்தளை திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மாசிமக மகோற்சவ சிறப்பிதழ்

துர்முகி வருடம் – மாசி 27ம் நாள்
March 11, 2017

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலய தெற்குவாயில் கோபுர கும்பாபிடேகமும் 'இந்து ஒளி' சிறப்பிதழ் வெளியீடும் 09-02-2017



இந்து ஒளி சிறப்பிதழை மகாராஜஸ்ரீ நகுலேஜ்வரக் குருக்கள் அவர்களிடம் மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்கள் சமர்ப்பிக்கின்றார்.



ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அருளுரை ஆற்றுகிறார்கள்.



சிறப்பிதழுக்கு அனுசரணை வழங்கிய வெஸ்டேர்ண் ஜுவலர்ஸ் அதிபர் திரு. வே.சிவசுந்தரம் அவர்களுக்கான சிறப்புப்பிரதியை மாமன்றத் தலைவர் அவர்கள் வழங்குகிறார். அருகில் யாழ் பணிமனை நிர்வாக அலுவலர் திரு. ஜெயசிங்கம்.



இந்து ஒளி சிறப்பிதழை வெளியிட்டு வைத்தது உரை நிகழ்த்தும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவரகளுடன் ஆலய சிவாச்சாரியார்கள்.

## திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி நிகழ்வுகள் 24-02-2017





## மாமன்றத்தின் சிவராத்திரி நிகழ்வுகள் 24-02-2017



## மாமன்றம் நடாத்திய இந்து சமயபாட ஆசிரியர்களுக்கான முழுநாள் கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் 28-01-2017 அன்று ஹட்டன் கல்வி வலய ஹைலாண்ட் கல்லூரியில் நடைபெற்றது.







ஹட்டன் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சாந்தகுமார், மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், ஆன்மீகசுடர் ரிஷி தொண்டுநாதன சுவாமிகள் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.



கருத்தரங்கில் பங்குபற்றிய இந்து சமய பாட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 21 சுடர் - 02

துர்முகி வருடம் மாசித் திங்கள் 27ஆம் நாள் (11.03.2017)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையிலன் வுடையானை யாவர்க்கு மறியொண்ணா
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்
சடையிற் கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே

### திருவாசகம்

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன்
நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோரிம்பமே வருந்
துன்பமே துடைத்தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல் விளையாம
லென்வினை யொத்தபின்
கணக்கிலாந்திருக்கால நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே

### திருவிசைப்பா

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உருமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றுப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லன்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்காது அமலச்செங் கமல
மலர்முகம் கலந்ததுஎன் கருத்தே

### திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
சுரந்துங் சுரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மானடஞ் செய்வரதர் பொற்றாள் தொழ!

திருச்சிற்றம்பலம்

## மக்கள் சேவையிலும் பெரும் பங்காற்றிவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

சைவ சமயத்தவர்கள் தாய்த் தெய்வ வழிபாட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். சக்தி இன்றி சிவம் இல்லை, சிவம் இன்றி சக்தி இல்லை என்ற தத்துவத்தின் அடிப்படையில் சிவ வழிபாட்டோடு கூடிய சக்தி வழிபாடு பண்டுதொட்டு எம் மத்தியில் நிலவி வருகிறது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற சக்தி தலங்களில் ஒன்றாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் விளங்குகிறது. மலையகத்தில் சைவத்தமிழர்களின் தலையாய திருக்கோயிலான இதனை மிகவும் நேர்த்தியாகக் காத்துவரும் அறங்காவலர்கள் பாராட்டுக்குரியவர்கள். சிவாகம நெறிமுறை தவறாது பூசை வழிபாடுகள் இக்கோயிலில் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் மொழிகளை மதங்களை கடந்த அதியற்புத தெய்வமாக விளங்குவதை ஆலய தேர்த்திருவிழா காலத்தில் அனைவரும் உணர்ந்து கொள்வர். இரு தினங்களாக திருத்தேர்பவனி நடைபெறும் போது பல பௌத்த மக்கள் பக்திபூர்வமாக வழிபாடு செய்வதையும், திருத்தேர் தரிசனத்துக்காக இவர்கள் சைவமக்களோடு இணைந்து காத்திருப்பதையும் வேறெங்கும் காணமுடியாது. அம்பாளின் அருளுக்கு அனைவரும் நன்றிக் கடனாக காத்திருந்து வழிபாடு செய்யும் பெருமரபு தொடர்கிறது.

மலையக மக்களின் பிரதான தலமாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் மக்கள் சேவையிலும்

மறுபக்கம் பார்க்க...



### மாமன்ற வரலாற்றில் பொற்காலம் படைத்த நாயகன்!

### மனிதநேய மாமனிதர்!

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக 1992 முதல் 2014 வரை பதவிவகித்து அதன்பின் இறுதி மூச்சுவரை மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவராக விளங்கிய மனிதநேயமாமணி திரு. வி. கயிலாசபிள்ளை, 19-02-2017ல் இறையடியெய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

24ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழ்த்து

ஆர்த்த பிறவித் துயரொடு அல்ல லெல்லாம்
தீர்த்த ருளும் திருக்குமரன் திருத்தாள் போற்றிக்
கீர்த்தி மிகுஅவன் நோன்பாம் கந்த சஷ்டிதனை
நேர்த்தியாய் நோற்று பேரருள் பெற்றுய்வோமே!

ஆர்வம் செலுத்தி வருகிறது. ஆலய வீதியிலேயே மிகப்பெரிய முன்பள்ளியை நல்ல வண்ணம் நடாத்தி வருகிறார்கள். முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு முன்பள்ளியில் கற்று வருவது இங்கு மட்டும்தான். இது சிறந்த சைவப் பாரம்பரியமிக்க முன்பள்ளியாக விளங்குகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் சீருடையுடன் காணப்படுகிறார்கள். மலையகத்தில் வறுமையில் வாடும் குழந்தைகளுக்கு இந்த ஆலயம் சிறந்த செயற்திட்டங்களை உருவாக்கி உதவிவருகிறது. மாத்தளையிலுள்ள சைவப்பாடசாலைகளுக்கு ஆலயம் ஒரு அரணாக செயற்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் இவ்வாலய அறங்காவலர் சபை தொடர்புகொண்டு செயற்பட்டு வருவது சிறப்புக்குரிய விடயமாகும். மாமன்றம் தனது வெளியீடுகள் ஊடாக மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சிறப்பை காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக ஆலய வருடாந்த திருவிழா காலத்தில் 'இந்து ஒளி' மகோற்சவ சிறப்பிதழாக வெளிவருவது பலருக்கும் நன்மையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளினால் பல வர்த்தகப் பெருமக்கள் எம் நாட்டில் செல்வச் சீமான்களாக வாழ்கிறார்கள். அவர்களது பெருங்கொடையால் மாத்தளை பிரதேசத்தில் சைவம் செழிப்புற்றுள்ளது. இப்பெருமை என்றும் தொடர நாம் பிரார்த்திப்போம்.

இலங்கையில் மிகவும் முக்கிய தலங்களுள் ஒன்றாக விளங்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு மலையக சைவப்பண்பாடு தொடர்பான பல்வேறு ஆய்வுகள் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.


## இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

**மாத்தளை திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய**
**மாசிமக மகோற்சவ சிறப்பிதழ்**
**மாசித்திங்கள் 27ம் நாள் (11-03-2017)**



ஆசிரியர் குழு : திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 50.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**

தலைமையகம்: 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) :0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk



*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்*
*தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*



## HINDU OLI

*Publication of* HINDU RESEARCH CENTRE
OF ALL CEYLON HINDU CONGRESS

**Matale Thiruvarulmihu Sri Muththumari Amman Temple Maasi Maha Mahotsava Special Issue**
March 11th of 2017



**Editorial Board :** Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஆசிச் செய்தி.



"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

மலையக் மக்களின் மரபுவழித் தெய்வமாக விளங்கும் முத்துமாரி அம்பாள் சிறப்பாக வீற்றிருக்கும் திவ்விய திருத்தலம் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயமாகும். பஞ்சரதப் பவனி நடைபெறும் இத்திருக்கோயில் பலவகையிலும் பெருமைமிக்கது. மாசி மகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு தோறும் ஆலய மகோற்சவம் வெகு விமரிசையாக நடைபெறுவதுடன், பல்வேறு விதமான அலங்காரங்களுடன் அம்பாள் வீதியுலாவருவதும் சிறப்புக்குரியது. இவ்வருட மகோற்சவம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி, ஆலய அறங்காவலர்களுக்கும் அடியார்களுக்கும் நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## அமெரிக்க ஹவாய் சைவஆதீனத்தைச் சார்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களின் ஆசிச்செய்தி



## மலையகத்தில் அருளாட்சி செய்யும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

இயற்கை எழில்கொஞ்சும் மாத்தளை மாநகரிலுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் பெருமைக்குரிய உயர் சக்திபீடமாக சிறப்புப் பெறுகிறது. வானுயர்ந்த கோபுரமும், வண்ணமிகு சிற்ப வேலைப்பாடுகளும் ஆலயத்தை தரிசிப்பவர்களை வியக்கவைக்கிறது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த நான்கு வருடகாலமாக மலையகத்தில் ஆன்மீகப் பணிகளுக்காகச் செல்லும்போது முத்துமாரி அம்பாளை தரிசிக்கும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது. திருவிழா காலத்தில் சமய சொற்பொழிவுகளில் பங்குபற்றி அடியவர்களுக்கு சில சிந்தனைகளைச் சொல்லும் வாய்ப்பும் கிட்டியிருக்கிறது.

இந்த ஆலயத்தில் மிக பயபக்தியாக பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வசந்த மண்டபத்தில் அம்பாளும் பரிவார தெய்வங்களும் அலங்காரத்துடன் கொலுவிருக்கும் காட்சி எவரையும் நெகிழவைக்கும். ஆலயத்தில் திருவிழா காலத்தில் நடைபெறுகின்ற கூட்டுப் பிரார்த்தனைகள் அனைவருக்கும் பக்தி ஈர்ப்பை ஏற்படுத்துகிறது. சுவாமி வீதிவலம் வரும்போது இளைஞர்கள் தோள்கொடுத்து அமைதியாக தொண்டாற்றி வருகிறார்கள். அன்னதானமும் திருவிழா காலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. மலையகத்தைப் பொறுத்தவரை அங்கு வாழும் சைவமக்களின் தலையாய திருக்கோயிலாக ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் விளங்குவதை அனைவரும் உணரலாம்.

மலையக மக்கள் அனைவரும் பிறப்பில் சைவசமயத்தவர்கள். நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, தோட்டப் பகுதிகளில் பிற சமயத்தவர்கள் எம்மக்களை மதம் மாற்றி வருவதை, மாத்தளை வாழ் மக்கள் கவலையோடு தெரிவித்து வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக சைவ மக்களாகிய நாம் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். மதமாற்றம் செய்வது என்பது அநாகரிகமானது. ஏழ்மையை பயன்படுத்தி வலிந்து மதம் மாற்றுவது மானிடநேயத்திற்குப் பிழையானது. எனவே எதிர்காலத்தில் மலையக மக்களை நல்லவண்ணம் காப்பாற்ற ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருவருளும், திருத்தொண்டர்களின் பக்திநேயப் பணிகளும் சிறக்கவேண்டும்.



மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளதும் சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களினதும் ஆன்மீக அருளுரை நடைபெற்ற தருணம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த திருவிழா சிறக்க வாழ்த்துவதோடு, இந்து ஒளி சிறப்பிதழை வெளியிடும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரையும் மனதாரப் போற்றி, எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியின் அருள் மழையில் நனைய வாரீர்!

**ஆலய பிரதம சிவாச்சாரியார்**
**சிவஸ்ரீ சுப்பிரமணிய குருக்கள் சிவானந்த குருக்கள்**

மத்திய மாகாணத்தின் மணிவிளக்காய் திகழும் மாத்தளை எனும் இபுபுண்ணிய பூமியிலே தனக்கென நிகரில்லாது தலைநிமிர்ந்து நவதள கோபுரத்துடன் காட்சிதரும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமும் அதன் ஆன்மீகப்பணிகளும் அறப்பணிகளும் வரலாற்றில் தடம்பதிக்க வேண்டியது என்றால் அது மிகையாகாது.

இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களையும் அணைத்தும் அரவணைத்தும் அன்பாய் ஆதரிப்பவள் அன்னை முத்துமாரி. அவளது அருள் சக்தியை ஒப்பிடமுடியாத வேதவல்லியானவள்! அழகுக்கு ஒப்பற்ற அபிராமவல்லியும் அவளே! அத்தகைய மகா சக்தியானவள் இம் மாத்தளை மண்ணிலே, இவ் ஆலயத்திலே எழுந்தருளி பல்வேறு சக்திரூபங்களாய் பரிணமிக்கிறாள் என்பதையும் நாமறிவோம்.

ஆலய சிவாச்சாரியார்களின் ஆசார அனுட்டானங்களும் வேதமந்திரங்களும், அறங்காவல் சபையினரின் அர்ப்பணிப்புடனான நிர்வாகக் கடமைகளும், அம்பாள் அடியார்களின் அசைக்கமுடியாத பக்திப்பரவச உணர்வுகளும், அரச, சமூக, கலாசார, சமய, கல்வி நிலையங்களின் பங்களிப்பும் இவ்வாலயத்தின் உன்னத நிலைக்கு தடம்பதித்தவை என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எத்தனை விழாக்கள், உற்சவங்கள், கும்பாபிஷேகங்கள், விரத அனுட்டானங்கள் யாவும் ஆண்டாண்டு தோறும் அம்பாளின் அருட்கடாட்சத்தினால் இனிதே நிறைவேற்றப்படுகின்றன. அத்தனை தடங்களிலும் ஆண்டுதோறும் மாசிமாத மகோற்சவம் அன்னை முத்துமாரியின் மகாசக்திக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் உலகெங்கும் உள்ள இந்துக்கள் அனுபவிக்கும் ஓர் ஆன்மீக உணர்வு என்றே கூறலாம்.

அத்தகைய அன்னை மாரியின் அருட்சக்தி மழையிலே நனைந்து எம் மலங்களை நீக்கி பெரின்ப உணர்வை அனுபவிக்க வாரீர்! வாரீர்! வந்து அம்பாளின் அருட்பார்வையில் உறவாட வாரீர்! மாசிமக பஞ்சரத பவனியில் தேரேறி அவள் வரும் காட்சியை கண்ணாரக் காண வாரீர் என இந்து மக்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

# மனித வாழ்விற்கு உரமூட்டுவோம்!

**நிர்வாகசபையின் வாழ்த்துச்செய்தி**

புனிதமான இலங்கை மண்ணில் இந்து,பௌத்தம், இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களோடு இதயபூர்வமான அன்பு கனிந்த ஒரு தாய் வயிற்று மக்களாக வாழ்கின்றோம். வாழவும் வேண்டும் அதுதான் இலங்கை மண்ணில் வாழ்கின்ற அனைவருக்கும் சொல்லக்கூடிய இதயபூர்வமான செய்தியாகும்.

எமக்குள் ஏற்படுகின்ற பகை, மனக்குழப்பம், புரிந்துகொள்ளாமை, விரக்தி, மற்றவர் மனதை புரிந்து கொள்ளாமை, பொறாமை ஆகிய நோய்களிலிருந்து முதலில் நாம் சுகமாக்கிக்கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சி, அன்பு, பாசம், ஈகை, குறைகாணாப் பண்பு, நிறைந்த பக்தி இத்தகைய மாமருந்துகளை உணவாக உள்வாங்கி கொண்டு இதயத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது கெட்ட எண்ணங்கள் அழுக்காறுகளை போக்கிக் கொள்ள சுலபமாக இருக்கும்.

உங்கள் பிள்ளைகளை மாசற்ற கல்வியில் மனம் திருப்புங்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் சமய வகுப்புக்களுக்கு (அறநெறிப் பாடசாலை) கட்டாயமாக அனுப்புங்கள். அவர்கள் ஒழுங்கும் ஒழுக்கமும் நிறைந்த பிள்ளைகளாக வளரட்டும். அப்போதுதான் அன்புள்ளங்களாக வாழ்வதோடு சமூகத்திற்கும் உலகத்திற்கும் உத்தமர்களாக திகழ்வார்கள்.

ஒரு வீடு திருந்தினால் ஒரு கிராமம் திருந்தும், ஒரு கிராமம் திருந்தினால் ஒரு நகரம் திருந்தும், ஒரு நகரம் திருந்தினால் முழு உலகமுமே திருந்தும். இதை அனைவரும் உணருங்கள் உளமாற சிந்தியுங்கள்.

மனிதத்தை நேசித்து மனித வாழ்விற்கு உரமூட்டுவோம். புனிதமான உணவை உண்டு நல்ல, உணர்வினைப் பெறுவோம்.

**நிர்வாக சபையினர்**
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்துமாரி அம்மை பேரில் ஊஞ்சல்



### காப்பு

திருமேவுநயமுகனை வென்றுநாளுஞ்
செய்யபன்னகமப்பதியிலினிது வாழுங்
கருமேவுமடியர் வினை கடிதின்மீளுங்
கவுரிதிருவூஞ்சலெனுங்கவிக்கெந்நாளும்
பருமேவுகுடிலைமத்பரந்து நீளும்
பராபரன்றனிடப்புறத்தேபதிந்து வாழும்
அருமேவுமம்பிகைதன்மகவதாகும்
ஐங்கரனே துணையாக ஆடிருஞ்சல்

### நூல்

மிடல்பொருவுமேருகிரிதனக்கொப்பாக
விளங்கியபொற்சிகரமதின்மேலன்பாகக்
கடன்மதித்துமங்குலங்கள்படிந்துமாரக்
கவின்செ'்தகோவையெனவழகுகூரப்
படமிகுத்தஉம்பர்காளரங்கள்பரிந்துகாலத்
திடமிகுத்தஅவையாகுமரங்கத்தேறிச்
சிவகாமி மாரிஅம்மை ஆடீரூஞ்சல்.

அறைவரியபிரபலமாமறைகள்நான்கும்
அணைந்ததூணாகவிட்டங்கலைகளாகப்
பெறவரியஅறுசமையங்கயிறதாகக்
பேசரியஆகமங்களணையதாகக்
குறைவரியபுராணங்கள்பலகையாகக்
கோதில்சங்கப்பீடமதின்மேலன்பாக
நிறைவுடனேயெழுந்தருளிஅடியார்போற்ற
நீடருளாய் மாரிஅம்மை ஆடீருஞ்சல்.

கண்ணகன்ஞாலந்துப்பாய்வயிரங்காலாய்க்
கருதுமாணிக்கஉத்ரக்கவின்செய்பாலாய்ப்
பண்ணமைந்தநவவச்ரப்பறளையாக்கிப்
பதுமராகத்திடையேபருமல்தேக்கி
வண்ணமைந்தமரகதநற்றகடுதாவி
வளமிகுந்தமண்டபத்தின்மகிழ்வாய்மேவி
விண்ணமையும்பன்னகமப்பதியைஆண்டு
மேவுகவுமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

துங்கமுறுமதில்பதிகசந்திரகாந்தத்
துகளறுநன்மணியாலும்கடிவங்காலப்
பங்கமில்லாப்பவளத்தாற்பலகையாக்கிப்
பகர்புட்பராகத்தாற்சதுரந்தேக்கிச்
சங்கமுறவிடையில்நவமணிகளாலுந்
தரித்தசித்ரமண்டபத்திற்றகைமைசால
விங்கிதமாயெழுந்தருளிஅடியார்போற்ற
விறைவிகவுமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

பம்பைதுடிமுரசுபேரிகைகளார்ப்பப்
பலதொனிகாகளமார்ப்பவிரலையார்ப்பக்
கும்பமுனிமறையோர்கள்குழுமியார்ப்பத்
தம்பமுறுதேவதுந்துமிகளார்ப்ச்
சல்லரிகொக்கரைபடகந்தண்ணெனறார்ப்ப
விம்பமதாயெழுந்தருளிஅடியார்போற்ற
மேவுகவுமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

இந்திரனும்மாலயனும்வடந்தொட்டாட்ட
இறையவரும்மறையவரும்வடந்தொட்டாட்டச்
சந்திரருஞ்சூரியரும்வடந்தொட்டாட்டத்
தானவரும்வானவரும்வடந்தொட்டாட்டக்
கொந்தலருங்குழன்மாதர்வடந்தொட்டாட்டக்
கோமுனிவர்கணநாதர்வடந்தொட்டாட்டச்
சிந்தைமகிழ்தொண்டர்களும்வடந்தொட்டாட்டத்
தேவிகவுமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

மேகநிகர்குழலசையப்பணிகளாட
விளங்கியகுண்டலங்கொப்புமின்னியாட
வேகனையசுடிபக்கம்விளங்கியாட
மேகலைநற்சிறுசெச்சைமிளிரென்றாட
வாகனையபாணியணிகிள்ளையாட
வயங்கியநூபுரச்சிலம்புகலிரென்றாடப்
பாகனையபங்கயப்பொற்பாதமாடப்
பரிந்துறையும்மாரிஅம்மை ஆடீருஞ்சல்.

அடியரைக்காத்திரட்சித்தஅமலையாகி
அருள்மருவப்பன்னகமத்தினிதின்மேவிப்
படியமுகில்திவலைசொரிந்தருள்வதென்னப்
பகரரியபலகருணைவிளைவாய்த்துன்னக்
கொடியெனும்நுண்மருங்கசையச்செய்யபாதக்
கொலுவசையத்தொண்டர்கரங்குவித்துப்போத
வடிவுடனேயிவர்ந்துபலதருமம்வாழ
வலாரிமாமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

துங்கமுடனெழுந்தருளிஅடியார்தங்கள்
தொல்வினைகள்மாற்றிடவேசோதியாகி
எங்குநிறைசரமசமனைத்தினுள்ளும்
ஏகாந்தரூபியெனஎழுந்துவிள்ளும்
பங்கமிலாதென்வினையும்நீக்கியாண்டு
பலகருணைவிளைவாகித்தொண்டாய்நின்றோர்க்
இங்கிதமாய்க்கமலத்திலினிதின்மேவும்
இறைவிகவுமாரிஅம்மை ஆடீருஞ்சல்.

பார்வாழ்கமறைவாழ்சைவம்வாழ்க
பகரரியபலதொண்டர்நாளும்வாழ்க
ஏர்வாழ்கமங்கையர்கற்பினிதுவாழ்க
வின்பமுடனரசர்செங்கோல்நாளும்வாழ்க
தாரனையபன்னகமத்துள்ளோர்வாழ்க
தருகவிசொன்னோர்கிளைகள்தளிர்த்தேவாழ்க
நேரனையஅம்மைசிவாலயமும்வாழ்க
நிறைமாரியருள்வாழ்க ஆடீருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னபூரணி தேவி



அன்னபூரணி தேவி, பார்வதி சக்தியின் ஓர் அம்சமானவள். அன்னம் என்றால் உணவு எனவும் பூரணம் என்றால் முழுமை, நிறைவு எனவும் பொருள்படும். ஈசனின் ஒருபாதியான பார்வதி, அன்னபூரணியாக இருந்து உலக உயிர்களுக்கு நிறைவான உணவை தந்தருள்கிறார். உலகில் உணவுக்குப் பஞ்சமில்லை ஆனால் மனிதர்களிடம் "கொடுக்கும் மனப்பான்மை" பஞ்சமாகி விட்டதே இந்த கலியுகத்தின் கசப்பான உண்மை. உணவின்றி உயிர்கள் வாழ இயலாது. உணவு என்பது உலக உயிர்களுக்கு அடிப்படைத் தேவையாகும். ஆகையால் இந்துதர்மத்தைப் பொறுத்தவரை உணவு மதிக்கத்தக்கது. உணவை வீணடித்தல் தீவினையாக கருதப்படுகின்றது. அதேவேளை உணவை பகிர்ந்து உண்ணுதல் பெரிதளவும் போற்றப்படுகின்றது. தர்மசாஸ்திரங்களைப் புரட்டிப் பார்த்தால் உணவை பகிர்ந்து உண்ணுவது எவ்வளவு மேலாகப் போற்றப்படுகிறது என்பதை நாம் காணலாம்.

"உணவை அவமதிக்க கூடாது. உணவை வீணடிக்க கூடாது. மற்றவர்களுடன் உணவைப் பகிர்ந்து உண்ண வேண்டும். உணவு தேவைபடுபவருக்கு அது மறுக்கப்படக் கூடாது. இதுவே அன்ன நியதி" (யசுர்வேதம், தைத்திரீய உபநிடதம் 3-7)

### தானத்தில் சிறந்தது அன்ன தானம்

அன்னபூரணி தேவி காசி விஸ்வநாதர் ஆலயத்தில் வீற்றிருக்கிறாள். அட்சய திருதியை திருநாளை அன்னபூரணியின் அவதார நன்னாளாக கடைப்பிடிக்கிறோம். இந்நன்னாளில் தேவைபடுவோருக்கு உணவு வழங்குவது மிகவும் உயர்ந்த செயலாகும். தங்கத்தையும் பணத்தாளையும் கொண்டு சென்று கோவிலில் கொட்டுவதால் அன்னபூரணி மனம் குளிரமாட்டாள். அதே பணத்தைக் கொண்டு தேவைபடுவோருக்கு ஒரு வேளை வயிறு நிறைய உணவு கொடுத்தாலும் அவள் மனம் மகிழ்ந்து அருள்புரிவாள். "பசித்தவருக்கு உணவு வழங்குபவனை பசி என்று சொல்லப்படும் கொடிய நோய் எந்த பிறவியிலும் வாட்டாது" என்று தர்மநூல்கள் குறிப்பிடுகின்றன. தானங்களில் சிறந்த தானமாக அன்னதானம் அமைந்துள்ளது. அன்னதானத்தின் இன்றியமையாத இயல்பைப் பற்றி பத்ம புராணம் பகர்கின்றது. பார்வதியின் அம்சமாகிய அன்னபுரணியைத் தொழும் போது ஈஸ்வரனான சிவனையும் கருத்தில் கொண்டு வழிபட வேண்டும். "மாதா பார்வதி தேவி பிதா தேவோ மஹேஷ்வர:" என்று ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். அன்னை பார்வதி உலக உயிர்களின் அன்னை, மகேசுவரனான சிவபெருமான் உலக உயிர்களின் தந்தை என்பதே இதன் பொருள்.

### உணவு உட்கொள்ளும் முன் பிரார்த்தனை அவசியம்

கண்களை மூடிக் கொண்டு, "அன்னபூரணி தாயே, இன்று உன் திருவருளால் எனக்கு உணவு கிடைத்துள்ளது. இதுபோல எல்லா உயிர்களுக்கும் நிறைவாக உணவு கிடைக்க வேண்டும். சிவன் சக்தியின் பிள்ளைகளாகிய எங்களை நீ எப்போதும் எந்த குறையும் இல்லாமல் காத்தருள்வாயாக" என்றும் பிரார்த்தனை செய்யலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்ன நியதி (உண்ணுதல் நெறிகள்):

**1) உணவை வீணாக்க கூடாது** - பசித்த போது தான் உணவு உட்கொள்ள வேண்டும். எனவே போதுமான அளவு உணவை தட்டில் போட்டு உட்கொள்ள வேண்டும். இன்னும் பசித்தால் பிறகு சேர்த்துக் கொள்ளலாம்.

**2) உணவை பகிர்ந்து உண்ண வேண்டும்** - நமக்கு கிடைத்த உணவை நம்முடைய நண்பர்களோடும் சுற்றத்தாரோடும் பகிர்ந்து உண்ணலாம். இது நமக்கிடையே உள்ள ஒரு நல்ல உறவை மேலும் வலுவாக்கும். மற்ற வேளைகளில் நாம் தயாரித்த உணவை அயலவர்களுடன் பரிமாறி கொள்வதால் ஒற்றுமையான சுற்றம் அமையும்.

**3) அன்போடு வழங்கப்பட்ட உணவை அலட்சியப்படுத்தக் கூடாது** - ஒருவர் அன்போடு நமக்கு கொடுக்கும் உணவை நாம் ஏற்றுக் கொண்டு அவருக்கு நன்றி கூறவேண்டும். பிறகு அந்த உணவை இல்லத்தாரோடு பகிர்ந்து உண்ணவேண்டும். உலகில் இலட்சக்கணக்கானோர் ஒருவேளை உணவுக்குத் தவிக்கும் நிலையில் நாம் உணவை மதிக்கப் பழகவேண்டும்.

**4) ஆரோக்கியமற்ற உணவை உண்ண வேண்டாம்**- ஆரோக்கியமற்ற உணவை நாமும் உண்ணக் கூடாது மற்றவர்களுக்கும் கொடுக்க கூடாது. உணவை வீணாக்க கூடாது என்ற பட்சத்தில் ஆரோக்கியமற்ற உணவை நாம் உண்ணுதல் நம் உடலைப் பாதிக்கும். உடலை பாதிக்கும் இயல்புடையது 'அன்னம்' அல்ல. உடலுக்கு ஊட்டத்தை அளிப்பதே அன்னம் ஆகும். நமது உணவுகளை இயற்கையானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**5) புலால் உணவுகளை உண்ணகூடாது** - இந்து சமயத்தன் முக்கிமான கோட்பாடுகளில் பிற உயிரை போற்றுதல், புலால் மறுப்பு ஆகியன மிக முக்கியமானவை. இறைவனால் படைக்கப்பட்ட எந்த ஒரு உயிரையும் கொல்ல இந்து மதம் எப்போதும் அனுமதித்ததில்லை. புலால் உணவை உண்பதால் அதன் உள்ளுணர்வுகளும் நம் உணர்வுகளில் கலக்கின்றன. இது மனிதர்களிடம் இருக்கும் தெய்வீக குணங்களை முடக்கி மெல்ல மெல்ல மிருக குணங்களை உருவாக்கும் என்பதை நம் முன்னோர் அறிந்திருந்தனர். அது விஞ்ஞான ரீதியிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடில்லாத புலால் உணவு நாளடைவில் பெரிய அளவிலான நோய்களை ஏற்படுத்தி மனிதனைக் கொல்கின்றன என்பதும் உண்மையான விடயம். மனரீதியிலும் உடல்ரீதியிலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும். நமது உடல், பற்கள், செமிபாட்டுத் தொகுதி, குடல் அமைப்புக்கள கூட தாவர உண்ணிகளையே ஒத்திருக்கின்றன். தாவர போசனமே ஆராக்கியமானது. "கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்பது வள்ளுவர் காட்டிய உலகப் பொது நியதி.

### ஶ்ரீ முத்துமாரி அம்பாள் பேரில் எச்சரீக்கை

சீர்மாத்தளைப்பதிமேவியதேவாசிவசேயா
திருமால்திருமருகாகரிமுகவா எச்சரீக்கை
-பரை-மகவா எச்சரீக்கை

அருளால்ஆறுமுகமாகிநல்லன்பர்தொழநண்பாய்ப்
பொருளாகியவுரைதாதைக்குப்பொறித்தாய் எச்சரீக்கை
-தகர்-பரித்தாய் எச்சரீக்கை

மயிடாசுரன்றனைவென்றுநல்லடியார்தமக்கருள்செய்
தயிலாருறைபதிமேவியஅரியே எச்சரீக்கை
-சவுந்-தரியே எச்சரீக்கை

மருமாமலர்ப்பொழில்சூழ்நிதமருமானகருறையும்
அருவாயுருவொளியாகியதிருவே எச்சரீக்கை
-அரு-ளுருவே எச்சரீக்கை

சிவகாமசுந்திரியாள்திருச்சிவனார்சவுந்தரியாள்
தெளிவானவர்க்கருள்தேக்கிடுந்தேவீ எச்சரீக்கை
-அன்பு-தாநீ எச்சரீக்கை

மறைமாலயற்கரிதாகியமகாமாரழயென்றுறைவாய்
அறைவார்கழலடிகாட்டியஅன்பே எச்சரீக்கை
-சொரி-நண்பே எச்சரீக்கை

அகலார்வினைதவிர்த்தாள்வதற்கமலாயிஎன்றுலகோர்
தொழமாத்தளைப்பதிமேவியசுடரே எச்சரீக்கை
-அருட்-டொடர்ரே எச்சரீக்கை

### பராக்கு

சீர்மாத்தளைப்பதியிறைந்தாய்பராக்கு
செங்கண்மால்துணைவியெனவந்தாய்பராக்கு

பார்மீதிற்பரையாகிவந்தாய்பராக்கு
பகவானிடத்துமையெனப்பண்புறுவாய்பராக்கு

சாலோகம்பரவிமுதலானாய்பராக்கு
சம்புகேஸ்வரியானதாயேபராக்கு

மூலமறைதேடரிமுதலேபராக்கு
மூவுலகும்நாவலர்கள்முத்தேபராக்கு

சித்தத்தனித்திரசதேனேபராக்கு
சீரானகலைமுதல்விஆனாய்பராக்கு

சுந்தரிநிரந்தரிநற்சுடரேபராக்கு
சொல்லரியமகமாயிஅம்மைபராக்கு

நித்தகவுமாரியெனவந்தாய்பராக்கு
நிருபர்புகழ்கமலாட்சிஆனாய்பராக்கு

அந்தரியாயுலகர்தொழவந்தாய்பராக்கு
அடியாரைக்காத்துரட்சித்தருள்வாய்பராக்கு

புங்கவர்கள்புகட்கரையாய்வந்தாய்பராக்கு
புகழுமருளந்தரியென்றானாய்பராக்கு

பூவலர்பன்னகம்மதிக்கவந்தாய்பராக்கு
புகழேனைநினதடியனாக்குபராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமாடும் திருநாளாம் மாசிமகம்



**"திருமுறைநெறிச்செல்வர்", இளஞ்சைவப்புலவர் இரா.ஜீவன்பிரசான் (மாத்தளை.)**

இந்துக்களுடைய முக்கிய தினங்களில் "கடலாடும் திருநாள்" "தீர்த்தமாடும் திருநாள்" "நீராடும் திருநாள்" என்றெல்லாம் சிறப்பித்துக் கொண்டாடப்படும் திரு நாள் மாசிமகம் ஆகும். மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரமும், பூரணை திதியும் கூடிய நாள் மாசி மகம் என வழங்கப்படும்.

இத்தினம் சிவன், விஷ்ணு, முருகன், சக்தி ஆகிய மூர்த்திகளுக்கு உகந்த நாளாகவும், பிதிர் கடன் செய்வதற்கு உகந்த நாளாகவும், தோஷ நிவர்த்திக்கு நீராடக்கூடிய திருநாளாகவும் அமைவதால் விஷேட திருநாளாகப் போற்றப்படுகின்றது. இத்தினம் வட இந்தியாவில் கும்பமேளா உற்சவம் என்ற பெயரிலும், தமிழகத்தில் கும்பகோணத் திருத்தலம், இராமேஸ்வரம் போன்ற தலங்களிலும், இலங்கையில் மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் மகோற்சவமாகவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

முன்பொரு காலத்தில் சிவபெருமான், பார்வதி சமேதராக திருக்கைலாயத்தில் வீற்றிருந்த வேளையில் பார்வதிதேவியார் ஈசனுக்கு உபகாரங்களை செய்து எம்பெருமானின் தத்துவ நிலையை அருளும்படி வேண்டினார். அதற்கு எம்பெருமான் "தேவி, பேரும், குணமும், உருவமும் இவினையும் இல்லாத நாம் சக்தியால் அருளுருவம் கொண்டு வினையாற்றுகின்றேன்" என்றுரைத்தார். இதனை கேட்ட தேவியார் தன்னால் இப்பிரபஞ்சம் இயங்குவதாகக் கூறி செருக்குற்றார். இவ்வாணவத்தன்மையை அடக்கும் பொருட்டு "சிவமில்லையேன் சக்தியில்லை" என கூறினார். இருவருக்குமிடையே தர்க்கம் முத்திட சிவன் சக்தியை தனித்து உலகம் இயக்கமின்றி நின்றார். பின்னர் சக்தி தன்னுடைய தவறை உணர்ந்து ஈசனிடம் சரணடைந்தாள். அத்தருணம் ஈசன் பிரம்மதேவரின் புதல்வனாகிய சிறுவிதி என வழங்கப்படும் தக்கனுக்கு கொடுத்த வாக்குறுதி நினைவுக்குவர தேவியை நோக்கி உன்னால் உலக இயக்கமின்றி நின்றமையால் அப்பாவச் செயலுக்கு நீரே காரணமாகியதால், அப்பாவ நீக்கம் பெறும் பொருட்டு யமுனா நதியில் வலம்புரிச் சங்கு வடிவில் தாமரை மலரின்மேல் நின்று தவஞ் செய்யக் கடவாய் என உரைத்தார். அதன்படி தேவியார் தவமிருந்து கொண்டிருக்கும் போது தக்கன் தன்னுடைய துணைவி வேதவல்லியுடன் யமுனா நதியில் நீராடிய போது தாமரை மலரின்மேல் வலம்புரிச் சங்கை கண்டு அதனை தொட்டவுடன் பெண்ணுருவமாகிட அப் பெண்ணை தாட்சாயினி எனப் பெயரிட்டு தன் புதல்வியாக ஏற்று வளர்த்தான். அம்பிகை தாட்சாயினியாக அவதரித்த நாள் என்றபடியால் அம்பிகைக்கு சிறப்பு நாளாகவும் முதன்மை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாசிமகத்தினுடைய சிறப்பினை சம்பந்தபெருமான் தன்னுடைய பூம்பாவைப் பதிகத்தில் வருமாறு

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலிச் சரமமர்ந்தான்
ஆடல் ஆணோறு உளரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்"

-சம்பந்தர் தேவாரம்-

தீர்த்தமாடும் திருநாளாகிய மாசிமகத்தினுடைய சிறப்பினை கூறி வியந்து இத்திருநாளாகிய மாசிமகம் காணாமல் போறியோ பூம்பாவை எனக் கூறி பூம்பாவயை உயிர்ப்பிக்கின்றார். பூம்பாவைப் பதிகத்தில் சம்பந்தர் பெருமான் கூறும் முக்கிய தினங்களுள் மாசிமகம் அடங்குவதால் மாசிமகமானது சிறப்புடையது என்பது தெளிவாகின்றது.

ஏனைய தலங்களுள் செய்த பாவம் காசியில் நீராடுவதால் தீர்வது போல, காசியில் செய்த பாவம் கும்பகோணத்தில் மாசிமகத்தன்று நீராடுவதால் நீங்கும் எனவும் கூறுவர். ஸ்நானம் செய்தால் பாவம் நீங்கும் என்பது திண்ணம். இத்தினத்தில் நீராடி பாவ நீக்கம் பெறுவதோடு, பிதிர்கடனுக்கு தர்ப்பணமும் செய்து வீடுபேறுக்கான வழியினை பெற்றுய்யும்படி எல்லாம் வல்ல இறைவனாரை வேண்டி பயன் பெறுவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்

## தேவஸ்தான வரலாறு

*கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா*

சக்தி வழிபாடு என்பது தொன்று தொட்டு நிலவி வரும் வழிபாட்டு முறை. அதன் பல்வேறு வகைகளில் ஒன்றுதான் மாரியம்மன் வழிபாடு. நமது தெய்வங்களுள் மாரியம்மன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவள். நமது தாயை போல் நம் குற்றங்களையெல்லாம் மன்னித்து குறைகளையெல்லாம் போக்கி பொறுத்தருளி அளவற்ற அன்பைப் பொழியும் நமது தாயைத் தெய்வமாகும்.

தமிழக மக்கள் எங்கெங்கு புலம் பெயர்ந்து சென்றார்களோ அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கிறார்கள். இலங்கை திருநாட்டுக்கு எங்கள் மாத்தளைதான் மலையகத்தின் தலைவாயில். தமிழகக் கரையிலிருந்து படகுகள் மூலம் கடலை கடந்து மன்னார் இறங்கு துறையை அடைந்து துன்ப துயரங்களோடு கால் நடையாக உயிர் தப்பி வந்தவர்களில் சிலர் மாத்தளை தலைவாயிலை அடைந்தனர்.

நான்கு புறமும் கோட்டை அரண்களென நிற்கும் பெரும் மலைத்தொடர்கள். இம் மலைத்தொடர்களிலிருந்து சுரந்தோடும் சிற்றாறுகள் நெடிய மரங்களைக் கொண்ட கானகங்கள் அத்தோடு வாழை கமுகு தென்னை மற்றும் வாசனை திரவியங்கள் கொண்ட அழகான பிரதேசமாக தங்கியிருக்கும் தலைவாயிலான மாத்தளை நம் முன்னோருக்கு புகழிடமாக அபயம் கொடுத்து அருள் வழங்கிய புண்ணிய தலமாகும்.

மலையகத்தின் எங்கள் மூத்த குடியினருக்கு மட்டும் அபயம் கொடுத்து அருள் வழங்கியது மட்டுமல்லாமல் புகழிடம் தேடி வந்தோரின் காப்பரணாகத் திகழ்ந்திருக்கின்றது. அநுராதபுர ராஜ்ஜியத்தை விட்டு வந்த வலகம்பாகு மன்னன் மாத்தளையிலே புகழிடம் அடைந்திருக்கிறான். இலங்கையின் ராஜதானிகளுக்கு வாரிசுரிமை கோரியவர்களுக்கும் ராஜ்ஜியத்தின் பெரும் அதிகாரிகளும் மாத்தளையிலேயே தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல 12ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனும் ஸ்ரீ வல்லபனும் தங்களின் நீதி விசாரனைகளை மாத்தளை மண்ணிலேயே நடத்தியிருக்கின்றனர்.

புகழிடம் தேடி வந்தோரின் காப்பரணாக திகழ்ந்த மாத்தளை மண்ணில் கொடூரங்களும் நிகழ்ந்திருக்கின்றன. சதிதிட்டம் தீட்டியதாகக் கருதப்படும் கண்டி மன்னனால் எகலப் பொலவின் மனைவியும் பிள்ளைகளும் கடைசிக் கண்டி மன்னனால் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. புலமைமிக்க ஞானிகள் பல்வேறு ஆய்வுகள் நடத்திய ஞான பூமி மாத்தளையாகும். சரித்திர காலத்திலிருந்தே சிறந்த மையமாக மாத்தளை மாநகர் விளங்குகிறது எனலாம்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மலையகத்தின் தலைவாசலாக விளங்கும் மாத்தளை மாநகரில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான திருக்கோயில் தலைநகரிலிருந்து 90ஆவது மைல் தொலைதுாரத்திலும் கண்டியிலிருந்து 16மைல் தொலைதுாரத்திலும் நான்கு பக்கமும் சூழப்பட்டு அருவிகள் கொட்டும் அழகுமலைக் குன்றுகளுக்கு கிழக்கேயும் மகாவலி கங்கையின் தீர்த்தக் கரைக்கு மேற்கிலும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள குறிஞ்சி முல்லை மருதம் எனும் மூவகை நிலங்களையும் உள்ளடக்கிய புண்ணிய பூமியான தேயிலையும் ரப்பரும் செந்நெல்லும் முக்கணிகளும் தென்னை கமுகு கொக்கோ கோப்பி மிளகு மூங்கில் போன்ற சோலைகளுக்கு மத்தியில் அருள் மழை பொழியும் உலகத்து நாயகி அன்னை பராசக்தியின் திருத்தலம் அமையப்பெற்றிருக்கிறது எனலாம்.

### ஆலய வரலாறு

சுருக்கமாக சொல்வதானால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் பண்ணகாமம் என்று முன்னோர்களால் அழைக்கப்பட்ட இம் மாத்தளையில் ஒரு சிறிய தங்குமிடம் ஒன்றிருந்தது. நெடுந்துாரம் கால்நடையாக வருபவர்களும் மாட்டு வண்டிகளில் பயணம் செய்பவர்களும் இம் மடத்தில் தங்கி செல்வது வழக்கமாக இருந்தது. தமிழகத்திலிருந்து அழைத்துவரப்பட்ட எமது மூதாதையர்கள் மன்னார் இறங்கு துறையில் இறக்கப்பட்டு அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் அனுராதபுரம் வழியாக மாத்தளை நுழைவாயிலை அடைந்திருக்கிறார்கள். அப்படி வந்த ஒரு சிலர் மாத்தளையிலே தஞ்சமானார்கள்.

அப்படி தஞ்சமடைந்தவர்கள் ஓர் வில்வ மரத்தடியில் அம்பிகையை ஒரு விக்கிரகமாக வைத்து தினசரி விளக்கேற்றி அன்னையை தரிசித்து வந்தனர். இத்தருணத்தில் மடத்தில் தங்கிச் செல்லும் வழிப்போக்கர்களும் உதவி செய்து வந்ததுடன் அம்பிகையை மிக பக்தியுடன் வணங்கி தங்களுக்கு தேவையானவற்றை கேட்டு நேர்த்திகளை வைத்து செல்வதுண்டு.

அப்படி அம்பிகையிடம் முன்வைக்கும் வேண்டுதல்கள் நிறைவேறுவதை உணர்ந்த பக்தர்கள் முத்துமாரியம்மனுக்கு நன்கொடைகளை வழங்கி ஆலயத்தை சிறிது சிறிதாக பெருப்பித்தார்கள். 1850களில் சிறு குடிலாக இருந்த ஆலயம் இன்று 108 அடி நவதள நவகலச இராஜகோபுரத்தைக் கொண்ட உலக பிரசித்திப் பெற்ற ஒரு ஆலயமாக திகழ்கிறது. இவ் ஆலய வளர்ச்சி கருதி திரு.சுப்பாபிள்ளை அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட இக்காணியின் உறுதி 1852ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாக வரலாற்று குறிப்புகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

1958ஆம் ஆண்டுகளில் மிகப் பழமையான கட்டிடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு மூலஸ்தான கோபுரம் அமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டதுடன் 1968ஆம் ஆண்டு கொடிக்கம்பம் நிர்மாணிக்கப்பட்டது. 1971இல் நடராஜப் பெருமான் கோயில். 1973இல் மேற்குவாசல் இராஜகோபுரம் மணிக்கோபுரம் போன்றவை நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.1992ஆம் ஆண்டு வசந்தமண்டபம் திருத்தியமைக்கப்பட்டு புதிய விமானம் கட்டப்பட்டதுடன். இதே வருடம் தீர்த்தக் கேணியும் கட்டப்பட்டது.

ஆரம்ப காலத்தில் வைகாசி விசாகத் திருவிழாவை அதிவிஷேடமாக நடாத்தி வந்தார்கள். இத்திருவிழா



அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மூலஸ்தானம் நிர்மாணிக்கப்பட்டு 1960ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெறும் காட்சி

இப்போதும் நடைபெற்றுவருவதோடு மாசிமக மகோற்சவ தேர்த்திருவிழா மிக விமரிசையாக நடாத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் காலத்தில் அம்பிகையை பிரதிஷ்டை செய்து வழிபட தொடங்கிய வில்வமரம் இன்றும் தலவிருட்சமாக விளங்குகிறது.

இத்தலவிருட்சத்துடன் சிறுகுடிலாக இருந்த ஆலயத்தை புதுப்பித்ததுடன் இதன் பக்கத்திலிருந்த நிலங்களை வாங்கி 1852ஆம் ஆண்டில் ஆலயத்திற்கு மானியம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் பூசாரிமார்களாலே ஆலயத்தின் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1956ஆம் ஆண்டுக்கு முன்னர் மாமாங்கு தீர்த்தத்தை சுடுகங்கை என்று அழைக்கப்படும் மகாவலி கங்கைக் கரையில் நடாத்தப்பட்டு வந்தது. (மாமாங்க தீர்த்தம் என்பது 12 வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தும் தீர்த்தமாகும்.) தற்போது ஆலய வளாகத்திலேயே கிழக்கு வாசல் பக்கமாக பெரிய தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருடம் தோறும் தீர்த்தோற்சவம் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1963ஆம் ஆண்டளவில் ஆகம முறைப்படி



விஸ்தரிக்கப்பட்ட ஆலயத்தின் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஸ்டை செய்யப்பட்டு அர்த்த மண்டபம் மஹா மண்டபம் தரிசன மண்டபம் என பல மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

ஆரம்பகாலங்களில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் மிக எளிமையாகவே நடைபெற்றன. காலப்போக்கில் உள்வீதி திருவிழாக்களை சப்பரங்கள் கட்டி சுவாமிகளை அலங்கரித்து



அதில் வைத்து திருவிழாவை நடாத்தி வந்தார்கள். அதன்பின் 1934ஆம் ஆண்டளவில் கட்டுத்தேர்கள் கட்டி அலங்கரித்து விநாயகர் தேர் சிவனம்பாள் தேர் முருகன்தேர் என முத்தேர் பவனி நடாத்தப்பட்டு வந்தது. 1977ஆம் ஆண்டு பாரிய பொருட் செலவில் சித்திரதேர் நிர்மாணிக்கப்பட்டு மாத்தளை மாநகர்க்கு பெருமை சேர்க்கும் அளவிற்கு அம்பிகைக்கு பஞ்சரதங்கள் பவனி வர தொடங்கின.

இப்படியாக பாரிய வளர்ச்சி கண்ட இவ்வாலயம் சமயப்பணியோடு நின்றுவிடாமல் பல சமூகப்பணிகளையும் அறங்காவல் சபையினர் முன்னெடுத்து வருவது ஒரு சிறப்பு அம்சமாகும்.

அதாவது

இலவச பாலர் பாடசாலை
அறநெறிப் பாடசாலை
தையல் பயிற்சி வகுப்பு
கணனி பயிற்சி வகுப்பு

ஏழை மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர கல்வி நிதியம் போன்ற சமூக சேவைகளை செய்து வருகின்றது. மேலும் இப்படிப்பட்ட சமூக சேவைகளை தொடர்வதற்கு தங்களைப் போன்ற பெரியோர்களது நன்கொடைகளை தருவது பேருதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை முத்துமாரி

**மா.புவனேஸ்வரி**
ஆசிரியை மாத்தளை ஶ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தான அறநெறிப் பாடசாலை

அனைத்து உயிர்களிற்கும் தாய் போல அண்டத்திற்கு தாயாக நின்று யாவற்றையும் சேயாய் காப்பவள். அந்த ஆதியும் அந்தமும் இல்லா சிவத்திற்கே சக்தியான அம்பிகை ஆவாள். இச் சக்தியே மாத்தளையில் முத்துமாரியாக விளங்குகின்றாள். பண்ணகாமமென்னும் மாத்தளையில் இயற்கை வளங்களுடன் அழகிய கோயிலில் எழுந்தருளியுள்ளாள். இலங்கையில் மலையகத்தில் வரலாற்று சிறப்பு பெற்ற முத்துமாரி அம்மன் ஆலயமாகும். வேண்டுவர் வேண்டுதல்கள் இங்கு நிறைவு பெறும்.

அம்பிகையே ஆதி சக்தி அவளே முத்துமாரி அவள் நோயை தீர்க்கும் வினைபோக்கி தனம் தந்து, தளர்வரியா மனம் தந்து, நல்லன எல்லாம் தந்து, அறம் பொருள் இன்பம் வீட்டின்பம் தந்து சௌந்தர்ய லகரியாக வீற்றிருக்கின்றாள்.

**தேடியுனை சரண் அடைந்தோம் – தேச**
**முத்துமாரி – கேடதனை நீக்கிடுவாள்**
**கேட்ட வரம் தருவாள்**
**பாடியுனை சரண் அடைந்தோம்**
**பாசமெல்லாம் களைவாய்**

என தன்னிடம் சரண் புகுந்த அடியார்க்கு காஞ்சியில் காமாட்சியாக, மதுரையில் மீனாட்சியாக காசியில் விசாலாட்சியாக, ஈழத்திருப்பதியில் மாத்தளை மாரியாக முத்து முகவொளி காட்டி அகவொளி ஒளிர அமர்ந்திருக்கின்றாள். மாத்தளை நகருக்கு எந்த ஒரு ஆபத்தும் நெருங்கவிடாது பாதுகாத்து அருள் பாலிக்கின்றாள். பல மதத்தவர்கள் வாழும் மாத்தளையில் ஒற்றுமையின் சிகரமாக பஞ்சரத பவனியில் பவனி வருகின்றாள்.

தன்னை பக்தியுடன் வணங்கும் அடியார்க்கு ஊழ் வினையை அகற்றி அவர்களுக்கு மோட்ச வழியை காட்டும் சக்தி அவள். மாத்தளையில் முத்துமாரியம்மனுக்கு மாசி மாதத்தில் கொடியேற்றி இருபத்தைந்து நாட்கள் பகல் இரவு திருவிழாக்கள் நடைபெறும். தினமும் அலங்கார சிம்ம வாஹினியாக உள்வீதி, வெளிவீதி பவனி வருவாள். ஆலயத்தில் சப்பரத்திருவிழா, வேட்டைத்திருவிழாவில் அம்பிகை அருள் கடாட்சம் தருவாள். பஞ்சரத பவனியில் மாசி மாதத்தில் சித்திரத் தேரில் சிறப்பாக வலம் வருவாள். பாவையர்கள் வடம் பிடித்து தேவி புகழ் பாடுவர். மாத்தளை மண்ணுக்கு புகழ் சேர்க்க மக்களின் நலனுக்கு ஒளி வீச வீதி வலம் வருகின்றாள். கருணை மாரியாக கருமாரியாக வையகத்தில் வாழும் மானிடர்களுக்கு அருள் பாலிக்க வருகின்றாள். அவள் புகழைப் பாடி பஞ்சரத பவனியை கண்டு களிப்போமாக.

**மாத்தளை மாரித்தாயே – நீ**
**மக்களை வாழ்வித்தாயே**
**வீதி உலா வரும் நன்னாளில்**
**மாநகரமே விழாக்கோலம் காணும்**
**இன மத வேற்றுமை இல்லாமல்**
**இன்புற்று வாழ்வோமே**
**அன்னையே உன்னருளை பக்தியுடன்**
**பணிந்தோமே**
**அகிலத்தை ஆள வந்தவளே – உனை**
**கரம் பற்றிடவே வடம்பிடித்தோம்**
**தாயே மகமாயி அருள்புரிய**
**வாருமம்மா!**

## மகாசிவராத்திரியின் மகிமையைப் பேணுவோம்!

(மகாசிவராத்திரியை முன்னிட்டு மாமன்றம் வெளியிட்ட வேண்டுகோள்)

இந்துக்களின் மிகவும் புனித தினமாக விளங்கும் மகாசிவராத்திரி விரத தினத்தில் சகல மதுபானக் கடைகளையும், இறைச்சிக் கடைகளையும், அசைவ உணவகங்களையும் மூடி மகாசிவராத்திரி விரதத்தின் புனிதத்தன்மையைப் பேண ஒத்துழைப்பு வழங்குமாறு இந்த நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், அரசாங்கம், சகல தலைவர்கள் மற்றும் இந்நாட்டின் மக்களாகிய அனைவரிடமும் பகிரங்கமாக வேண்டிக் கொள்ளுகின்றோம். நாடெங்கும் பரந்துவாழும் இந்து மக்கள் மகாசிவராத்திரி விரததினத்தன்று ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுப் பரம்பொருளின் அருளைப் பெறும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகளை செய்யுமாறும் வேண்டுகிறோம்.

மகாசிவராத்திரி தினத்தின் மகிமையை மறக்காது அன்று சமய அனுட்டானங்களை அனுட்டித்து வழிபாடுகளில் ஈடுபடுமாறு இந்து மக்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

சுமார் 4 தசாப்தங்களாக வேதனைகளாலும் சோதனைகளாலும் வாடும் எம் மக்களுக்கு விமோசனம் அருளுமாறும், தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் தம் வதிவிடம் திரும்ப அருள் பாலிக்குமாறும், சிறைகளில் அரசியற் கைதிகளாகவாடும் எம் உடன் பிறப்புக்களை அந்தக் கொடுமையிலிருந்து விடுவிக்குமாறும் இப் புனிதமான - புண்ணியமிகுந்த மகாசிவராத்திரி விரத தினத்தில் எல்லாம்வல்ல ஶ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஶ்ரீ நடராஜப்பெருமானின் திருவருளை வேண்டி அகில இலங்கை இந்து மாமன்றம் பிரார்த்தித்து நிற்கின்றது.

(24-02-2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத விரதங்கள்

**1. பங்குனி உத்திர விரதம் :**

பன்னிரெண்டாவது மாதமான பங்குனியும், பன்னிரெண்டாவது நட்சத்திரமான உத்திரமும் இணையும் புண்ணிய திருநாள் பங்குனி உத்திரம். தெய்வத் திருமணங்கள் அதிகம் நடைபெற்ற மாதம் பங்குனி என்கின்றன புராணங்கள்.

**பங்குனி உத்திர நன்னாளின் சிறப்பு :**

இமவான் தன் மகள் பார்வதியை சிவனுக்கு திருமணம் செய்ய தேர்ந்தெடுத்தது காஞ்சியில் காமாட்சி அம்மன் ஆற்று மணலை சிவலிங்கமாக பிடித்து வழிபட்டு சிவனின் அருளைப் பெற்றது மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம் நடந்தது ராமர் சீதையை மணந்தது லட்சுமணன், சத்ருகன் ஆகியோருக்கும் திருமணம் நடந்தது இடும்பன் மூலம் காவடி தூக்கும் பழக்கம் ஆரம்பித்தது திருப்பரங்குன்றத்தில் முருகன் - தெய்வானை திருமணம் நடந்தது ஆண்டாள் - ரங்கமன்னார் திருமணம் நடந்தது அர்ச்சுனன் பிறந்தது ஆகிய அனைத்தும் நடந்தது பங்குனி உத்திர நன்னாளில்தான். சமஸ்கிருதத்தில் பங்குனி மாதத்திற்கு பல்குணன் என்று பெயரும் உண்டு. இந்த பங்குனி உத்திரத்தில்தான் தர்மசாஸ்தாவான சபரிமலை ஐயப்பன் அவதரித்தார். சிவனின் தவத்தை கலைக்க நினைத்த மன்மதனை சிவன் நெற்றிக்கண்ணால் எரித்ததும் பின்பு ரதியின் பிரார்த்தனைக்கு மனமிரங்கி மன்மதனை உயிர்பித்த நாளும் இதுதான். மார்க்கண்டேயனுக்காக சிவன் காலனை தன் காலால் உதைத்த நாள். இத்தனை சிறப்பு வாய்ந்த பங்குனி உத்திர தினத்தில் நாமும் இறைவனை பிரார்த்தித்து இறைவனின் பரிபூரண அருளை பெறுவோம்.

பங்குனி உத்திரநாளில் சிவபார்வதி திருமணம் நடந்தது. நல்ல மணவாழ்க்கை வேண்டுவோர் இந்நாளில் சிவபார்வதியை வேண்டி விரதம் மேற்கொள்வர். இந்நாளில் தம்பதியர் விரதம் இருந்து சிவன், அம்பாளுக்கு அபிஷேகம் செய்து, நீண்டநாள் ஒற்றுமையுடன் வாழ அவரது அருளைப் பெறலாம். திருமணமாகாத பெண்கள் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் பக்தியுள்ள கணவர் கிடைப்பார் என்பது ஐதீகம். ஓம் சிவாயநம, ஓம் பராசக்திநம என்ற நாமத்தை 108 முறை ஜெபிக்கவேண்டும். மதியம் ஒருவேளை உணவு உண்ணலாம். இயலாதவர்கள் காலை, இரவு பால் பழம் சாப்பிடலாம். இவ்விரதத்தினை முருகப்பெருமானை வேண்டியும் மேற்கொள்ளலாம். மாலை கோயிலுக்குச் சென்று தீபமேற்றி வழிபடவேண்டும்.

**2. சௌபாக்கியகௌரி விரதம்**

பங்குனி மாதம் வளர்பிறை திருதியை அன்று பெண்கள் செல்வச் செழிப்போடு நல்ல கணவன், குழந்தைகள், பேரக் குழந்தைகள் என நிறை வாழ்வு வாழ்வதே சௌபாக்கியம் எனப்படும்.

அத்தகைய நிறை வாழ்வு வரம் தரும் இவ்விரதத்தில் அன்னையை சௌபாக்கிய சுந்தரி என்னும் திருநாமத்தால் சிவனாருடன் இணைந்த திருக்கோலத்தில் வழிபட வேண்டும். தக்ஷனின் மகளான சதி தேவி இவ்விரதத்தின் பயனால் சிவனாரை மணந்தாள். இவ்விரதம் சௌபாக்கியம் எனப்படும் அனைத்து (பதினாறு) வகை பேறுகளையும் பெற்றுத் தரும்.

## நாதியில்லை என்ற நிலை அகற்றி எமைக் காத்திடம்மா!

**- த. மனோகரன் -**

எட்டுத்திக்கும் அருள்பரப்பி ஏற்றிடம்மா கருணைஒளி
மட்டில்லாபேருவகை வழங்குகின்ற தலைமகளே
ஓட்டிவிடு தீமைகளை ஒளிரச் செய்வாய் நன்மைகளை
மாத்தளைமாநகர் அமர்ந்த முத்துமாரி அம்மாவே

மலைசூழ்ந்த பெருநிலத்தில் அருள்வழங்கக் கோயில்கொண்டாய்
அலைமோதும் மனங்களிலே ஆறுதலைத் தருபவளே
நிலைகுலையா நிம்மதிக்கு உன்துணையே வேண்டுமம்மா
தலைதாழ்த்தி வணங்குகிறோம் முத்துமாரி அம்மாவே

எழில் சூழ்ந்த மலையகத்தின் மத்தியிலே அமர்ந்தவளே
வழித்துணையாய் இருந்தெமக்கு நல்வழி காட்டிடம்மா
இழிநிலையைப் போக்கிவிடு, இன்பநிலை தந்துவிடு
விழிமலர்ந்து நிற்பவளே முத்துமாரி அம்மாவே

சலித்துநிற்போர் மனங்களிலே நம்பிக்கை ஒளிநீயே
கிலிகொண்டு துவண்டு நிற்போர் துயர்போக்கிஅருள்பவளே
வலிந்து வரும் துன்பநிலை அகற்றிவழிகாட்டிடுவாய்
நலிவில்லா நலமளிக்கும் முத்துமாரி அம்மாவே

நன்மைகள் பெருகிடவும் நானிலத்தோர் மகிழ்ந்திடவும்
உண்மையெங்கும் ஓங்கிடவும் ஊரெல்லாம் செழித்திடவும்
மென்மையுள்ளம் கொண்டவளே அடிபணிந்தோம் உந்தனையே
அன்பைப்பெருக்கிஎமை அணைத்தருள்வாய் முத்துமாரிஅம்மாவே

வீதிவலம்வந்துநலம் அருளுகின்றதிருமகளே
நாதியில்லை என்றநிலை அகற்றி எமக்குத் துணையிருப்பாய்
ஆதிசக்தி தாயான அன்னை நீ அருகிருப்பாய்
கதிநீயே காத்து உயர்வளிப்பாய் முத்துமாரியம்மாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை இந்து மாமன்றம் நடாத்திய

# "இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு"

இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராய அகில இலங்கை இந்து மாமன்றம் ஒரு மாநாட்டை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த 12-02-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் நடாத்தியது.

பாதிக்கப்பட்ட ஆலயங்கள், இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள், வறுமையால் பாதிக்கப்பட்ட இந்து மக்கள் மற்றும் இம் மாநாட்டில் ஆராய வேண்டிய ஏனைய விடயங்கள் சம்பந்தமான விதந்துரைப்புக்களை போதுமான சான்றுகளின் பிரதிகளுடன் இந்து ஆலயங்களையும், இந்துநிறுவனங்களையும், இந்துமக்களையும் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விட்டிருந்தது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில நடைபெற்ற இம் மாநாட்டில் மாமன்ற பொதுச் செயலாளர திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி, மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, இந்த மாநாட்டில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்திலிருந்து பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது பிரதேச இந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சமரப்பித்தனர். குறிப்பிட்ட-உடனடியாகத் தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் மாநாட்டிலேயே தீர்வு காணப்பட்டதுடன் சில விடயங்கள் மேல் நடவடிக்கைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு அது தொடர்பான தீர்வுகள் கூடிய சீக்கிரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் சாரமாக காணப்படுபவை பெரும்பாலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களை புனரமைக்க எந்தவித உதவியும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பல ஆலயங்கள் இன்றும் புனரமைக்கப்படாதுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

நாடளாவிய ரீதியில் மக்களிடையே மதமாற்றச் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. மக்களின் விளக்கமின்மை, வறுமை, கல்வி ஆகியவற்றைக் காரணம் காட்டியும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இந்துக்கள் திட்டமிட்டு பின்தள்ளப்பட்டு அல்லது விலக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் அவர்கள் மனமுடைய வைக்கப்படுகின்றனர். அதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் இந்துக்கள் தமது காணிகளை மலிவு விலையில் முஸ்லீம் மதத்தவருக்கு விற்று விட்டு இடம்பெயர்ந்து செல்ல வைக்கப்படுகின்றனர் அல்லது மதம் மாற்றப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றது. அதேபோன்று இந்துக்கள் வசிக்கும் பகுதிகளில் மனித, விலங்குக் கழிவுகள் கொட்டப்படுதல், இந்து ஆலயங்களை சேதப்படுத்தி சூறையாடுதல் போன்ற இன்னல்களையும் விளைவிக்கின்றனர். இந்நிலை தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டபோதிலும் அவை கண்டுகொள்ளப்படுவதில்லை. ஏனெனில் அம் மாவட்டங்களில் பெரும்பான்மையாக மாற்று மதத்தினரே உயர் அதிகாரிகளாக திகழ்கின்றனர். இவ் அபாயகரமான சூழ்நிலையானது வெறுமனே முஸ்லிம்களால் மட்டுமின்றி பௌத்த மற்றும் கிறித்தவ சமயத்தினராலும் காணப்படுகின்றது. இந்துக்கள் வாழும் அமைதியான சூழலைக் குழப்பும் நோக்குடன் கிறித்தவ சிலைகளை நிறுவுவது, தேவாலயங்களை அமைத்து சமநிலையை குழப்புவது போன்ற செயற்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டது.

மலையகத்தினைப் பொறுத்தவரையில் மதமாற்றம் மிகப் பரந்த அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், இந்து ஆலயங்களை அமைக்கவும், புனருத்தாரணம் செய்யவும் போதிய நிதிவசதி இன்மையால் அவ் ஆலயங்கள் கைவிடப்படுவதும் மக்கள் இந்து மதம் பற்றிய போதிய விளக்கமின்றிக் காணப்படுவதும் மதமாற்றுவோருக்கு மிகச் சாதகமான சூழ்நிலையினை உருவாக்குகின்றது.

இதனை தவிர்ப்பதற்கு துண்டுப்பிரசுரங்கள், இலவச நூல்கள், மதமாற்ற எதிர்ப்புப் பிரசாரங்கள், அறநெறிப்பாடசாலைகளை மேலும் உருவாக்குதலும் தொடர்ந்து செயற்பட வைத்தலும், ஆலயங்களை புனரமைத்தல், அவற்றிற்கான பரிபாலன சபைகளை உருவாக்குதல், அர்ச்சகர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்றவையும் முன்வைக்கப்பட்டன.

மேலும் பொதுவாக காணப்படும் பிரச்சினையாக இந்து சமய பாட ஆசிரய ஆளணி தொடர்பானதாக காணப்படுகின்றது. இந்து சமய பாடத்துக்கென உள்வாங்கப்படும் ஆசிரியர்கள் அதனை விடுத்து வேறு பாடங்களை கற்பிப்பதும், வேறு பாடங்களை கற்பிக்கும் சம்பந்தமில்லாத ஆசிரியர்கள் இந்து சமய பாடம் கற்பிப்பதும் மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இந்நிலை தொடர்பாக சம்பந்தப்பட்ட மாகாண, வலய, கோட்ட பாடசாலை மட்ட அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் மதவிரோத மனப்பான்மையும் மூல காரணிகளாகும். பல பாடசாலைகளில் இந்து சமய பாட வேளையில் மாணவர்களை வேறு பாடம் படிக்கச் சொல்வதும், மைதானத்துக்கோ, நூலகத்திற்கோ சென்று தமது பாடவேளையை கழிக்குமாறு அறிவுறுத்தப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது. ஏனைய மத நூல்களை உருவாக்க காணப்படும் பொறிமுறை இந்து சமய பாட நூல்களை உருவாக்குவதில் காட்டப்படாமையும், இந்து மதத் தலைவர்கள், மற்றும் கல்வியியலாளர்களின் ஈடுபாடின்மையும் இதற்குரிய மேலதிக காரணிகள் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னின்று ஒரு ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வருவதுடன் துறைசார் அறிஞர்கள் கொண்ட ஒரு அமைப்பை உருவாக்கி செயற்படவும் வேண்டுகோள் வைக்கப்பட்டது. மேலும் பல பிரச்சினைகள் முன்வைக்கபட்ட்துடன் அவை தொடர்பான தீர்வுகளும் மன்வைக்கப்பட்டது. மேலும் இப்பிரச்சினைகள் தொகுக்கப்பட்டு ஜனாதிபதியிடம் மகஜராகக் கையளிக்கவும் உள்ளதாக மாமன்றத் தலைவர் அவர்கள் உறுதியளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீசக்ரம்

ஸ்ரீசக்ரத்திற்கு 43 முக்கோணம். அவை முறையே சிவகோணம் - 3, சக்திகோணம் - 5, அஷ்டதளம், ஷோடச தளம், மூன்று வலயங்கள், 4 - சக்ரங்கள், பிந்துநாதம் கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவதாகும். இந்த ஸ்ரீசக்ரத்திலே யோக சாஸ்திரங்களில் விளக்கி உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களும் அடங்கியுள்ளன. அதாவது முக்கோணம் மூலதாரமாகவும், அஷ்டாரம் சுவாதிஷ்டானமாகவும், தசாரம் மணிபூரகமாகவும், பஹிர் தசாரம் அனாஹதமாகவும், மன்வச்ரம் விசுத்தியாகவும், பிந்து ஆக்ஞையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. (அண்டத்திலே சுவாதிஷ்டான க்ஷேத்ரமாக திருஆனைக்கா விளங்குகின்றது.)



பூஜைகள் செய்து, அவருடைய அனுமதியைப் பெற்றுத் தனிமையில் பூஜையைச் செய்யவேண்டும் என்பதும் நமது முன்னோர்களுடைய மரபாகும்.

**ந வா ர வ ர ண அமைப்பு...**

அம்பிகையை ஸ்ரீசக்ரம் அல்லது ஸ்ரீசக்ர மேருவில் நவாவரண பூஜை செய்வது சிறப்பு. நவ ஆவரணம் என்றால் ஒன்பது சுற்றுக்கள் என்பது பொருள். ஆவரணம் என்றால் சுற்று அல்லது அடைப்பு என்று பொருள் கொள்ளலாம்.

சரீரத்திலே மூலாதாரத்திற்கு மேலே இரண்டு அங்குலத்தில் ரத்னம் நான்கு தளங்களைக் கொண்டு சுவாதிஷ்டானம் என்னும் சக்ரமானது விளங்குகிறது. ஆறு இதழ்களோடு ஆறு அக்ஷரங்களோடு செந்நிறப் பொலிவுடன் விளங்கும் அத்தாமரையை அறிஞர்கள் சுவாதிஷ்டானம் என அழைப்பார்கள். அவ்விடத்தில் பாலன் என்ற சித்தனும், ராகினி என்ற தேவியும் வசிக்கின்றனர்.

ஆறு இதழ்களிலும் பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, யசஸ்வினி, ரமாசம்பேஷ்டி என ஆறு தேவிகளும் வசிக்கின்றனர். இந்த ஆதாரமானது தனக்கு மேலான அக்னி தத்துவத்துடன் இணைந்து விளங்குகிறது. இவ்விடத்திலேதான் குண்டலினி தானே அதிஷ்டானமாகி கிரந்திகளைச் செய்து கொண்டிருக்கும் என சாத்திரங்கள் கூறுவதால், அந்த ஆதாரத்திற்குச் சுவாதிஷ்டானம் எனப் பெயர்.

சித்தாந்த சாத்திரமானது சரஸ்வதியோடு கூடிய பிரம்மாவை, அபயம், வரதம், கமண்டலு, அட்சரமாலை இவைகளை நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு அக்ஷரங்களோடு கற்பனை செய்யப்பெற்ற பத்மத்திலே காந்தியுடன் சிந்தனை செய்யவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. சக்தி உபாசகர்கள் மேதஸ் என்ற தாதுவைத் தனது இருப்பிடமாகக் கொண்ட காசினி என்ற தேவதையைத் தியானம் செய்கின்றார்கள். இதே போன்று மற்ற ஆதாரங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீசக்ரத்தைப் பூஜிக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் குருவினுடைய பரம்பரை வழிவந்த உபதேசம் பெற்று ஒவ்வொன்றையும் நன்கு கவனித்துச் செய்யவேண்டும். குருவினுடைய முன்னிலையில்

ஸ்ரீசக்ரத்தில் முதல் சதுர வடிவாய் உள்ள மூன்று கோடுகள் த்ரைலோக்ய மோகன சக்ரம் எனப்படும். இது முதலாவது ஆவரணம். இதில் உள்ள சக்திகள் பிரகடயோகினிகள் எனப்பெறுவர்.

இரண்டாவது ஆவரணம் ஸர்வாசாபரிபூரக சக்ரம் ஆகும். இதில் உள்ள சக்திகள் குப்தயோகினி ஆவர்.

மூன்றாவது ஆவரணம் எட்டுத்தளம் உடைய ஸர்வஸம்க்ஷோபண சக்ரம்.இதில் உள்ள சக்திகள் குப்ததர யோகினிகளாவர்.

நான்காவது ஆவரணமான பதினான்கு கோணம் உடைய ஸர்வஸௌபாக்ய சக்ரத்தில் ஸம்ப்ரதாய யோகினிகள் வசிக்கின்றனர்.

ஐந்தாவது ஆவரணம் வெளிப்பத்துக்கோணம், ஸர்வரக்ஷாகரசக்ரம். இதில் உள்ள சக்திகள் குலோத்தீர்ண யோகினிகளாவர்.

ஆறாவது ஆவரணம் பத்துக் கோணமுடைய ஸர்வார்த்தஸாதகசக்ரம் . இதில் உள்ள தேவதைகள் நிகர்ப்பயோகினிகள்.

ஏழாவது ஆவரணம் எட்டுக்கோணமுடைய ஸர்வரோகஹர சக்ரமாம். இதில் உள்ள சக்திகள் ரஹஸ்யயோகினிகளாவர்.

எட்டாவது ஆவரணம் முக்கோண வடிவமுடைய ஸர்வஸித்திப்ரத சக்ரமாகும். தேவதைகள் அதிரஹஸ்ய யோகினிகளாவர்.

ஒன்பதாவது ஆவரணம் ஸர்வானந்த மய சக்ரம். இது பிந்து வடிவமானது. இதில்தான் பரமேச்வரனும் பரமேச்வரியும் இருந்து உலகை ரட்சிக்கின்றனர்.

*நன்றி: "நலம்தரும் இயந்திர வழிபாடு", ச. ஸ்ரீநிவாசன், சென்னை , தமிழ்நாடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சக்தி பீடங்கள் என்பவை ஆதி சக்தியின் ரூபமான சதி தேவியின் (தாட்சாயிணியின்) உடல் பாகங்கள் விழுந்த இடங்களில் எழுப்பப்பட்ட கோயில்களாகும். சக்தி பீடம் என்பதற்கு சக்தியின் அமர்விடம் என்று பொருளாகும். இவற்றில் ஐம்பத்தியொரு சக்தி பீடங்கள் அட்சர சக்தி பீடங்கள் என்றும், பதினெட்டு சக்தி பீடங்கள் மகா சக்தி பீடங்கள் என்றும் நான்கு சக்தி பீடங்கள் ஆதி சக்தி பீடங்கள் என்றும் அறியப்படுகின்றன. சக்தி பீடங்கள் அனைத்தையும் தரிசிக்க முடியாவிட்டாலும் ஆதி சக்தி பீடங்கள் நான்கையாவது தரிசிக்க வேண்டும் என்பது நியதி. அஸ்ஸாமின் கவுஹாத்தியிலுள்ள காமாக்யா கோவில், கல்கத்தாவின் காளிகாட் காளி கோவில், ஒடிசாவின் பெர்ஹாம்பூரிலுள்ள தாராதாரிணி சக்தி பீடக் கோவில் மற்றும் ஒடிசாவின் பூரி ஜகந்நாதர் கோவில் வளாகத்திலுள்ள விமலா தேவி சன்னதி ஆகியன நான்கும் ஆதி சக்தி பீடங்களாகும். எந்த சக்தி பீடத்திற்கு சென்றாலும் அங்குள்ள பைரவரையும் வணங்க வேண்டுமென்பதும் ஒரு நியதியாகும். தேவி பாகவதம் என்ற நூல் அன்னைக்கு 108 சக்தி பீடங்கள் உள்ளதாகவும் அதில் 64 சக்தி பீடங்கள் முக்கியமானது என்றும் கூறுகிறது. ஆனால் தந்திர சூடாமணியில்தான் 51 சக்தி பீடங்கள் தெளிவாக உள்ளது. அதனால் இந்நூலைப் பின்பற்றியே பெரும்பாலான சக்தி பீடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

**சக்தி பீடங்கள் பற்றிய புராணத் தகவல்**

தந்தையாகிய தட்சனால் அவமதிக்கப்பட்ட தாட்சாயிணி அந்த யாகம் அழியுமாறு சபித்து விட்டு, தட்சன் தந்த உடல் தனக்கு வேண்டாமென தட்சன் நடத்திய யாகத்தின் தீயிலேயே சங்கமித்து விடுகிறாள். சிவனால் படைக்கப்பட்ட வீரபத்திரர் அந்த யாகத்தை அழித்தார். இதனால் உக்கிரமடைந்த உருத்திரன் தாட்சாயிணியின் இறந்த உடலை எடுத்துக் கொண்டு ஊழித்தாண்டவம் ஆடினார். சிவனின் ஊழித்தாண்டவத்தை நிறுத்த விஷ்ணு தன் சக்ராயுதத்தால் தாட்சாயிணியின் உடலை 51 துண்டுகளாக்கினார். உருத்திரன் சாந்தமானார். சிதறிய தாட்சாயிணியின் உடல் பகுதிகள் விழுந்த 51 இடங்கள் சக்தி பீடங்களாயின. பிறகு தாட்சாயிணி பர்வதராஜன் மகள் பார்வதியாகப் பிறந்து ஈசனை மணந்தாள். சனத்குமாரர்கள் (பிரம்மபுத்திரர்கள்) சதச்ருங்க மலையில் சதாசிவனை நோக்கித் தவம் செய்தனர். அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்த சிவன் ரிஷபாரூடராக தோன்றினார். ஆனாலும் ஆழ்ந்த தியானத்திலிருந்து சனத்குமாரர்கள் கண் விழித்துப் பார்க்கவில்லை. அவர்களை விழிக்கவைக்க சிவன் தன் கையிலுள்ள டமருகத்தை (உடுக்கை) வேகமாய் அடித்தார். சனத்குமாரர்கள் கண்விழித்து சிவனடி பணிந்தனர். இதனை சிவமகா புராணம் சொல்கிறது. அந்த உடுக்கையிலிருந்து "டம்டம்" என்று எழுந்த நாதமே சமஸ்கிருதத்தின் 51 எழுத்துகளாயின என்றும், இவை பாரத தேசத்தின் 51 இடங்களில் எரிநட்சத்திரம்போல் தெறித்து விழுந்தன என்றும் பக்தர்களால் நம்பப்படுகிறது. அவையே "அ" முதல் "க்ஷ" வரையிலான 51 எழுத்துகளாகும். சமஸ்கிருதத்தின் 51 அட்சரங்கள் (எழுத்துகள்) தோன்றிய இடங்களிலேயே பிறகு தேவியின் முக்கியமான உடல் பகுதிகள் விழுந்தன. ஆகவே அவற்றை 51 அட்சர சக்தி பீடங்கள் என்பர். இந்த அட்சர சக்தி பீடங்கள் பற்றிய விரிவான தகவல்களை மேரு தந்திரம் எனும் நூல் கூறுகிறது.

சக்தி பீடங்கள் தொடர்பில் பல்வேறு எண்ணிக்கை கூறப்பட்டு வந்தாலும் பெரும்பாலும் ஒத்தகருத்துடன் 64 என்ற எண்ணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் நமது இலங்கைத்தீவில் வடபால் அருள்பாலிக்கும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமானது புவனேஸ்வரிபீடம் மணித்வீபம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் மேலும் திரிபுரபுவனேஸ்வரிபீடம் எனவும் ஒரு சக்திபீடம் மணித்தீவில் இருந்ததென புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆராய்ச்சிகளை எமது தொல்லியல்துறை மற்றும் இந்துநாகரீகத்துறையினர் ஈடுபடுவார்களேயானால் இந்து மதத்தின் மேன்மை மேலும் செழிக்கும் எனபது வெள்ளிடை மலை.

1 - மாத்ரு புரம் - ரேணுகா பீடம்.
2 - கொல்லாபுரம் - லஷ்மி பீடம்.
3 - துளஜாபுரம் - சப்தச்ருங்க பீடம்.
4 - இங்குளை - ஜ்வாலாமுகீ பீடம்.
5 - ஸ்ரீ காசி - அன்னபூர்ணா பீடம்.
6 - ரக்த தந்த்ரிகை - விந்த்யாசல பீடம்.
7 - ரக்த தந்த்ரிகை - துர்கா பீடம்.
8 - சாகம்பரீ - ப்ராமீரி பீடம்.
9 - மதுரை - மீனாட்ஷி பீடம்.
10 - நேபாளம் - ரஷய காளீ பீடம்.
11 - ஸ்ரீ நகரம் - சாம்பு நகேச்வரி பீடம்.
12 - நிலபர்வதம் - நீலாம்பரி பீடம்.
13 - ஸ்ரீ சந்திரகலை - கௌசிகீ பீடம்.
14 - ஸ்ரீ காஞ்சி - காமாட்ஷி பீடம்.
15 - வைத்ய நாதம் - ஜ்வாலா பீடம்.
16 - சைனா - நீலசரஸ்வதி பீடம்.
17 - வேதாரண்யம் - ஏகாம்பர பீடம்.
18 - வேதாரண்யம் - சுந்தரீ பீடம்.
19 - மஹாசலம் - யோகேஸ்வர பீடம்.
20 - ஹிதய பர்வதம் - மாதேவீ பீடம்.
21 - மணித்வீபம் - புவனேஸ்வரி பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - மணித்வீபம் - திரிபுரபைரவி பீடம்.
23 - அமரேசம் - சண்டிகா பீடம்.
24 - ப்ரபாஸம் - புஷ்கரேஷணி பீடம்.
25 - புஷ்கரம் - காயத்ரீ பீடம்.
26 - நைமிமீசம் - தேவி பீடம்.
27 - புஷ்காராஷம் - புருகாதா பீடம்.
28 - ஆஷாடம் - ரதி பீடம்.
29 - பாரபூதி - பூதி பீடம்.
30 - கண்ட முண்டம் - தண்டினீ பீடம்.
31 - நாமுலம் - நாகுலேஸ்வரி பீடம்.
32 - ஸ்ரீகிரி - சாரதா பீடம்.
33 - பஞ்ச நகம் - திரிசூல பீடம்.
34 - ஹரிச் சந்திரம் - சந்திரா பீடம்.
35 - ஆமரதகேஸ்வரம் - ஸீஷ்மபீடம்.
36 - மஹாகாளாஸ்தி - சாங்கீரீ பீடம்.
37 - மத்யாபீதம் - சர்வாணி பீடம்.
38 - கயை - மங்கள பீடம்.
39 - கேதாரம் - மார்க்கதாயினீ பீடம்.
40 - பைரவம் - பைரவீ பீடம்.
41 - குருஷேத்ரம் - தர்ணுப்பிரியை பீடம்.
42 - விபினாகுலம் - ஸ்வாயம் பலி பீடம்.
43 - கணகளம் - உக்ர பீடம்.
44 - விமகேஸ்வரம் - விஸ்வேஸ பீடம்.
45 - ஹடாஹாசம் - மதாந்தக பீடம்.
46 - பீமம் - பீமபீடம்.
47 - வஸ்த்ரம்பதம் - பவானி பீடம்.
48 - அவமுக்தம் - விசாலாஷி பீடம்.
49 - அர்த்த கோடிகம் - ருத்ராணி பீடம்.
50 - அவமுக்தம் - வராஹி பீடம்.
51 - மஹாலயம் - மஹாபாகாபீடம்.
52 - கோகர்ணம் - பத்ரகாளீ பீடம்.
53 - பத்ரகர்ணீகம் - பத்ரா பீடம்.
54 - ஸ்தாணும் - ஸ்தாண்வீசாபீடம்.
55 - ஸ்வர்ணாஷம் - உத்பலாஷி பீடம்.
56 - கமலாலயம் - கமலா பீடம்.
57 - சகமண்டலம் - ப்ரசண்ட பீடம்.
58 - மகேடெம் - மகுடேஸ்வரி பீடம்.
59 - குரண்டலம் - த்ரிசந்திரகா பீடம்.
60 - மண்டலேசம் - சரண்டகா பீடம்.
61 - ஸ்தூலகேஸ்வரம் - ஸ்தூல பீடம்.
62 - சங்க கர்ணம் - தீவனி பீடம்.
63 - கரவஞ்சம் - காளி பீடம்.
64 - ஞானிகள் இதயம் - பரமேஸ்வரி பீடம்.

தொகுப்பு :மு.பிரணவன்

# மனிதனின் ஆறு எதிரிகள்

அரிஷத்வர்கம் என சொல்லப்படும் மனிதனின் ஆறு எதிரிகளும், மனிதனின் மனதினுள்ளேயே மறைந்திருந்து அவனை மெல்ல மெல்ல அழிக்கின்றன. அரி என்றால் எதிரி எனவும், ஷத் என்றால் ஆறு எனவும், வர்கம் என்றால் குழு எனவும் பொருள்படும். ஒவ்வொன்றும் மனிதனின் வாழ்க்கையில் மிகப்பெரும் பேரழிவை ஏற்படுத்தும் இயல்புடைய குணங்களாகும். பக்தி நிலையைப் பொறுத்தவரை இந்த ஆறு குணங்களும் மனிதன் இறைவனின் திருவருளைப் பெற விடாமல் தடுக்கும் 'எதிரிகள்' என சொல்லப்படுகின்றது.

**1) காமம் :** காமம் என்றால் "அவா" "ஆசை" அல்லது "தீவிர ஆசை" எனப் பொருள்படும். தர்மநியதிக்கு உட்பட்ட ஆசை ஆக்கத்தை தரும். அதுவே தர்மநியதிக்கு எதிரான ஆசை அழிவையே தரும். பணம், பொருள், புகழ், பதவி போன்றவற்றின் மீது தீவிர ஆசை கொள்வது குற்றமாகும். எனவே, ஆசையை அடக்கிடுக.

**2) குரோதம் :** குரோதம் என்றால் "கோபம்" அல்லது "சினம்" எனப் பொருள்படும். ஆசைபட்ட ஒரு பொருளை அடைய முடியாமல் போய்விட்டால், அந்த ஆசை கோபமாக மாறும். கோப உணர்ச்சி மனத்தின் செயல்பாடுகளில் சஞ்சலங்களை ஏற்படுத்தி, வாக்கையும் செயலையும் பாதிக்கும். கோபத்தால் எழும் வாக்கும் செயலும் எப்போதும் சரியானதாக இருப்பதில்லை. எனவே, சினத்தைப் போக்கிடுக.

**3) லோபம் :** லோபம் என்றால் "பேராசை" அல்லது "வெஃகுதல்" எனப் பொருள்படும். தேவைக்கு அதிகமான ஒன்றை அடைவதற்காக ஆசை கொள்வது பேராசை எனப்படுகின்றது. அதேபோல மற்றவருக்கு சொந்தமான ஒன்றை அடைய முயல்வது வெஃகுதல் எனப்படுகின்றது. வேண்டியது கிடைத்தால் அதைக் கொண்டு திருப்தி கொள்ள வேண்டும். அதைப் போலவே மேலும் மேலும் வேண்டும் என்று பேராசை கொள்ளக் கூடாது. ஆகவே, பேராசையைத் தவிர்த்து விடுக.

**4) மோகம் :** மோகம் என்றால் "மருட்சி", "பற்றுதல்" அல்லது "மயக்கம்" எனப் பொருள்படும். ஒரு பொருளின் மீது கொண்ட அளவற்ற பற்றுதலினால் அதை எப்படியாவது அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. இதுவே ஒருவனை பல தீயசெயல்களிலும் ஈடுபடத் தூண்டுகின்றது. எனவே, மருட்சியை நீக்கிடுக.

**5) அகங்காரம் :** அகங்காரம் என்றால் "இறுமாப்பு" அல்லது "செருக்கு" எனப் பொருள்படும். பதவி, கல்வி, அறிவு, செல்வம் போன்றவற்றை ஒருவன் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக கொண்டிருக்கும் போது அவனிடம் செருக்கு ஏற்படுகின்றது. அகங்காரம் என்ற எதிரி ஒருவனின் மனத்தில் அவன் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்ற கண்மூடித்தனமான நம்பிக்கையைத் தூண்டுகின்றது. இதனால் அவன் சக மனிதர்களிடம் மரியாதை, கருணை போன்ற அடிப்படை நற்குணங்கள் இன்றி செயல்படுகின்றான். ஆகவே, செருக்கை ஒழித்திடுக.

**6) மத்ஸர்யம் :** மத்ஸர்யம் என்றால் "பொறாமை" எனப் பொருள்படும். தன்னை விட வேறு எவனும் கல்வி, பதவி, அறிவு, செல்வம் போன்றவற்றில் உயர்ந்து விட கூடாது என்ற ஓர் எண்ணம் தான் பொறாமை ஆகின்றது. மற்றவர்களின் அறிவாற்றல், திறமைகள், செல்வம் போன்றவற்றைக் கண்டு பொறாமை கொள்பவர்கள் அவற்றை எப்படியாவது அழித்துவிட எண்ணம் கொள்வர். இத்தகைய ஓர் எண்ணம் உண்மையில் தன்னைத் தானே அழித்துக் கொள்ள விதைக்கப்பட்ட விதை என்பதை அவர்கள் அறிகிலர். எனவே, பொறாமையை அகற்றிடுக.

இறைவனின் முழுமையான திருவருளை அடையும் எண்ணம் உள்ளவர்கள், முதலில் இந்த ஆறு தீய குணங்களையும் "கழுவி" விடவேண்டும். அன்றாடம் இறைவனின் நாமத்தை ஜபம் செய்தலும், மந்திர உச்சாடனம் செய்தலும், தேவாரம் மற்றும் பிரபந்தம் பாடுதலும், பகவத் கீதையைக் கற்றலும் ஒருவனின் மனதிலிருக்கும் ஆறு எதிரிகளையும் அழித்து விடுகின்றன.

*நன்றி: "பெண்மை" இதழ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகால துர்க்கை அம்மன் வழிபாட்டு முறைகள்

நாம் இந்து மத இறைவழிபாட்டில், 100க்கு 90 சதவீத பெண்கள் துர்க்கை அம்மனுக்கு கண்டிப்பாக விளக்கு ற்றியிருப்பார்கள். பிரார்த்தனை செய்ய, திருமணம் நடைபெற என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து செய்யப்படுகின்றன. துர்க்கை அம்மனை, ராகு காலத்தில் வழிபடவேண்டும். நம்முடைய தீர வேண்டிய, தெய்வத்தின் அருளால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு, குடும்ப பிரச்சினைகளுக்கு, சொந்த பந்தத்தல் நிகழ்ந்த தீராத பிரச்சினையின் கடுமை குறைய, செவ்வாய்க்கிழமை மாலை 3.00 - 4.30 ராகு காலத்தில் துர்க்கை தனித்திருக்கும் ஆலயத்தில், ஒரு எலுமிச்சை பழத்தினை இரண்டாக நறுக்கி, சாற்றினை பிழிந்துவிட்டு, விளக்குப் போல் திருப்பி, நெய் ஊற்றி, அதன் பின்னரே 5 இழைகள் கொண்ட நூல் திரி போட்டு அதன் நுனியில் சிறிது கற்பூரம் வைத்து, விளக்கு ஏற்ற வேண்டும். அடுத்தவர் ஏற்றிய விளக்கில் ஏற்றக்கூடாது. விளக்கினை ஜோடியாக தான் வைக்க வேண்டும். தீப ஒளி அம்மனை நோக்கியவாறு விளக்கு இருக்க வேண்டும்.

நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் பிணி தீர வேண்டுமானால், ஞாயிறு மாலை 4.30 - 6.00 ராகு கால வேளையில், மேற் குறிப்பிட்டவாறு விளக்கு ஏற்ற வேண்டும். நமக்கான, நமது குடும்பத்திற்க்கான, வேண்டுதல், பிரார்த்தனை நிறைவேற்றம் முதலான நன்மையின் பொருட்டு வேண்டுதல் வெள்ளிக்கிழமை 10.30 -12.00 மணி நேரத்தில் மேற்குறிப்பிட்டபடி எலுமிச்ச பழ விளக்கு ஏற்ற வேண்டும். இந்த பூஜையின் போது, அம்மனுக்கு மல்லிகை பூ அல்லது மஞ்சள் சாமந்தி பூ மட்டுமே சாற்ற வேண்டும். அம்மனுக்கு அர்ச்சனை செய்வதாக இருந்தால் அம்பாளின் பெயரில் அர்ச்சனை செய்த பின்னரே, விளக்கு ஏற்ற வேண்டும். விளக்கு ஏற்றிய பின்னர் கோவிலை 3 முறைடிசுற்றுகள், வலம் வந்து நமஸ்கரிக்க வேண்டும். அதன் பின்னர் 20 நிமிடங்கள் அமர்ந்திருக்க வேண்டும்.

அப்பொழுது, துர்க்கை பாடல்கள் சொல்லியவாறு இருக்கவேண்டும். 21 வது நிமிடம், கோயிலைவிட்டு வெளியேறி விட வேண்டும். வழியில், பிசையிடக்கூடாது. ராகுவால் உண்டான கஷ்ட நிவர்த்தி பூஜை ஆனதால் நவகிரகம் சுற்ற வேண்டாம். வீடு திரும்பி, வீட்டில் பூஜை அறையில், ஒரு நெய் தீபம் ஏற்றி, 5 ஊதுபத்தி ஏற்றி, கற்பூரம் ஆராதனை செய்து, நிம்மதியாக ஓய்வு எடுக்கவேண்டும். வீட்டில் ஏற்றிய தீபம் அணையும்வரை, வெளியில் செல்லக்கூடாது. கண்ட கதைகள் பேசி கொண்டிருக்க கூடாது. இதுவே முறைப்படி செய்யும் வழிபாட்டு முறையாகும். இவ்வாறு 9 வாரங்கள் செய்வது முறை. தொடர்ச்சியாக செய்வதே உத்தமம். நமது பிரச்சினை தீர, வேண்டுதலுக்காக, ஆலயம் செல்லும்போதும் வரும்போதும் இறை நினைப்பில் செல்ல வேண்டும். கும்பலாக செல்வதை தவிர்க்கவேண்டும். கண்ட கதைகளை ஆலயத்திலும், செல்லும்போதும், வரும்போதும் பேசுதலை தவிர்க்க வேண்டும்.



**துர்கை**
**(ராகுதோஷ நிவர்த்திக்காக)**

ஓம் காத்யாயனாய வித்மஹே
கன்யகுமரி தீமஹி
தன்னோ துர்கிஹ் ப்ரசோதயாத்
ஓம் சிம்மத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ மாரி ப்ரசோதயாத்

**காயத்திரி**
**(சகல காரியங்கள் வெற்றி அடைய)**

ஓம் பூர்புவஸ்ஸ்ªவஹ தத் ஸவிதுர்
வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோனஹ் ப்ரசோதயாத்

*நன்றி : "பக்தி"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவரலாற்றில் அம்மன் வழிபாடு




ஈழத்தின் நாகரிகமும் தென் இந்திய நாகரிகத்தின் பரவலே என்பதை அண்மைக்கால தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இச்சான்றுகள் சிங்கள தமிழ் மொழி பேசுபவரின் மூதாதையர் ஈழத்திற்கு கி.மு 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்த மதம் பரவமுன்னர் இந்துக்களாக விளங்கியதையும் எடுத்துக்காட்டியுள்ளன. இவர்கள் இந்துக்களாக விளங்கியதையும் எடுத்துக்காட்டியுள்ளன. இவர்கள் இந்துக்களாக விளங்கினாலும் தமிழ் நாட்டைப்போல் இருவித கலாச்சாரப் படைப்புக்கள் இக்கால இந்து மதத்தில் காணப்பட்டன.

இதனை அடித்தளமாக இப்பிராந்தியத்திற்கே சிறப்பாக உரிய திராவிட வழிபாட்டு முறைகள் முறைகள், இரண்டாவதாக இவ்வழிபாட்டு முறைகளுடன் வந்து சங்கமித்த வட இந்திய ஆரிய கலாச்சார அலைகள், இவை பற்றி எடுத்து இயம்பும் ஆதாரமாக பிராமிய கல்வெட்டுக்கள் பௌத்தமத வரலாற்று நூல்களாகிய மகாவம்சம் போன்றவற்றினையும் மற்றும் அங்கும் இங்கும் காணப்படும் எச்சம்களும், சுடுமண் பாவைகள், சிற்பங்கள், நாணயங்களில் காணப்படும் உருவம்கள் அமைகின்றன. அவ்வகையிலே ஈழத்தில் அம்மன் வழிபாடு பற்றி நோக்குவோம்.

முதலில் பிராமியக் கல்வெட்டுக்களில் காணப்படும் சான்றுகளை ஆராய்வோம். துர்க்கை என்ற பெண் தெய்வம் பற்றிய செய்தி ஒரே ஒரு கல்வெட்டில்தான் உள்ளது. இக்கல்வெட்டு மாத்தளை மாவட்டத்தில் உள்ள எண்டேரகலை என்ற இடத்தில் காணப்படுகிறது. இதில் உபாசகனான "துக"/துர்க்காஸ அதாவது துர்க்கையின் பக்தனுடைய குகை என்று பொருள் தரும் வாசகம் காணப்படுகிறது. இவளுக்கு நிவேதனமாக மது, மாமிசம் படைத்தல் போன்ற சடங்குகள் நிகழ்ந்ததும் பழைய தெய்வமாக இவளை ஆக்குகின்றன. மேற்கூறிய துர்க்கைதான் சங்க இலக்கியங்களில் கூறப்படும் கொற்றவையாக இருக்கலாம். கொற்றவையின் பண்புகள் பல துர்க்கையிலும் காணப்படுகிறது.

சக்தி வழிபாடு உலகத்திலேயே மிகப்பழமையானது. ஆதிகால சமுதாய வளர்ச்சியில் வேறெச்சக்தியையும் விட தாய்மை வழிபாடே முக்கிய இடத்தினை வகித்தது. விவசாயத்துறையில் ஈடுபட்ட மக்கள் பூமாதேவியை தாயாக கண்டனர். கி.மு 6ம், 4ம் நூற்றாண்டுக்குரிய கதைகளிலே யக்ஸி, நாகினி பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. விஜயன் இந்த நாட்டில் வந்து இறங்கிய போது யக்ஸகள் அவனை எதிர்கொண்டனர். இதனால் விஜயன் அவர்களுக்கு கோயில் அமைத்தான் எனவும் கூறப்படுகிறது.

அடுத்து அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள டெமரகல என்ற இடத்தில் லட்சுமி பற்றிய கருத்து ஒன்று காணப்பட்டது. இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் இவள் லசி எனக்குறிக்கப்பட்டுள்ளாள். சில இடத்தில் தேவி.ராணி என்ற பதமும் காணப்பட்டது. " பச்சிராமணி" எனப்பட்ட பெண் தெய்வம் வழிபட்டதை மகாவம்சம் குறிப்பதால்"தேவி" என்ற பதமும் "அம்பாள்" என்ற கருத்தைத்தந்து பெண் தெய்வத்துக்குரிய பெயராயே அமைந்தது.

அடுத்து யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் சிவனின் மனைவியாகிய உமை வழிபட்டாள் எனக்கூறுகிறது. விஜயன் காலத்தில் கீரிமலைப்பகுதியில் அமைந்திருந்த திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி ஆலயங்கள் குறிப்பிடத்தக்கது. மேலும் முருகவழிபாட்டுடன் இணைந்ததாயும் சக்தி வழிபாடு வழிபடப்பட்டது. புத்தள மாவட்டத்தில் பொம்பரிப்பு எனுமிடத்தில் கிடத்த வேல்சின்னம் இதனை எடுத்துக்காட்டுகிறது. முருக வழிபாடு இரு தாய்த்தெய்வ வழிபாட்டை எடுத்துக் கூறுவதாக உள்ளது. ஒன்று கோற்றவை வழிபாடு, இரண்டாவது முருகன் மனைவியாகிய வள்ளி பற்றிய மரபு. வள்ளி முருகனது முதல் மனைவி. வள்ளியை மணஞ்செய்வதற்காக முருகன் ஈழத்தில் வந்து பாசறை அமைத்து பற்றி நீண்டதொரு ஐதீகம் நிலவுவதால் முருகனும் அவனது சக்தியாகிய வள்ளியும் ஈழத்தில் வழிபடப்பட்டனர் எனலாம்.

அடுத்து தாய்த்தெய்வ வழிபாட்டு மரபிலே காளிபற்றி நோக்கும்போது ஈழத்திலே அநுராதபுரத்தில் பில்லாவெகல எனுமிடத்தில் "உபஸகடி" என்ற பதமும் மற்றையது மாத்தளை மாவட்டத்தில் சிகிரியாவிலுள்ள "பரும ககடியபத" என்ற வாசகமும் காளி துர்க்கை கொற்றவையுடன் தொடர்புடையவள் என்பதைக் காட்டுகின்றது.

அடுத்து கார்த்திகைப் பெண்களை நினைவூட்டும் இரு கல்வெட்டுக்கள் அநுராதபுரமாவட்டத்தில் காணப்பட்டது. கார்த்திகா என்பவள் "கிதக", "கத" என குறிப்பிட்டுள்ளாள். இவ்வாறு பரணவிதான கூருகிறார். மிகிந்தலையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டொன்று மகாராஜ கமணிதிஸவின் மனைவியும் உபாசிகாவுமான கிதகவினது குகை எனக்கூறப்படுகிறது. கார்த்திகாவின் இன்னோரு வடிவமான கிருத்திகாவின் மருவுதலே "கிதக" என பரணவிதான கூறுவது ஏற்புடையதாகின்றது.

இதைவிட மீனாட்சி என்ற தாய்த்தெய்வம் பற்றிய கருத்துக்களும் உண்டு. மாத்தளை மாவட்டத்தில் உள்ள தம்புல்லவில் உள்ள இரு கல்வெட்டுககளில் "மசக" ."மசகயலெண" என்ற பெயர்கள் காணப்பட்டது. இதில் மசக என்பது மசக என்ற பெயரை தாங்கியவாறு குகை எனப்பொருள்படும்.

அடுத்து ஈழத்திலே கண்ணகி எவ்வாறு வளர்ச்சி பெறறது. என்பதை நோக்கும்போது சிங்கள, தமிழ்க் கலாச்சாரங்களை ஒன்று சேர்த்து நிக்கும் வழிபாடும் இதுவென்றால் மிகையாகாது. கண்ணகியை சிங்கள மக்கள் "பத்தினி" வழிபட்டனர். கண்டிப்பெரகராவில் விஸ்ணு, கந்தன், சிவன் போன்றோருடன் பத்தினிக்கும் ஒரு பிரதான இடத்தினை சிங்கள மக்கள் அளித்து இருப்பதோடு நாட்டைக்காக்கும் காவல் தெய்வங்களில் ஒன்றாயும் விளங்குகிறாள். இதுவே தாய்த்தெய்வ வழிபாட்டின் பழமைக்கும் தொடர்ச்சிக்கும் தக்க எடுத்துக்காட்டு எனலாம். அவ்வகையிலே ஈழத்திலே கண்ணகி வழிபாட்டைப் புகுத்தியவனாக கஜபாகு மன்னன் குறிப்பிடப்படுகின்றான்.

ஈழத்து கஜபாகு மன்னனும் தமிழ்நாட்டு பிற மன்னரும் அவ்வழிபாட்டை தத்தம் நாட்டிற்கு எடுத்து சென்றனர் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இக்கூற்றினையே ஈழத்துப் பிற்கால நூல்களாகிய இராஜாவலியவும் இராஜரத்னாகரவும், கஜபாகத்தாவா போன்ற நூல்களும் ஆமோதித்துள்ளன. தெய்வத்தின் சிலம்பினையும் 4 கோயில்காளின் தெய்வங்களையும்



ஆயுதச்சின்னங்களையும் வலம்பாகு காலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட புனித பாத்திரத்தினையும் பெற்றுக்கொண்டு கஜபாகு ஈழம் மீண்டான் என நம்பப்படுகிறது. ஆடி மாதம் தோறும் கஜபாகு மன்னன் தனது தலைநகரான அநுராதபுரத்தில் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்தான். அவ்விழாவில் பத்தினியின் காற்சிலம்பு யானைமேல் ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்படுவது வழக்கம்.

இத்தாய்த்தெய்வ வழிபாடு ஈழத்தில் சுலபமாக பரவுவதற்கு பல காரணிகள் இருந்தன. தமிழகமும் ஈழமும் அரசியல் கலாச்சாரத் துறைகளில் பண்டைய காலத்தில் இருந்து நெருங்கிய தொடர்பினைக் கொண்டு இருந்தன. அதனால் தான் ஈழத்தில் கண்ணகி வழிபாடு சுலபமாக உட்புகுந்தது. கொற்றவை, பத்திரகாளி, காளி, துர்க்கை முதலிய ஆறு கன்னிமாரில் இளையவள் என்ற நிலையில் கண்ணகி கருதப்பட்டதைப் பற்றி சிலப்பதிகாரத்தில் உள்ள வழக்குரை காதை /வரி 36-40ா குறிப்பிடுகின்றது.

கண்ணகிக்கு சிலை எடுத்தது பற்றிக்கூறும் செய்தி தமிழகத்தில் வேரூன்றியிருந்த பெருங்கற்கால கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகிய நடுகல் வழிபாட்டு அம்சமே. ஈழத்தில் இம் மரபுவழி வந்த வழிபாடே நாச்சிமார் வழிபாடாகும். கண்ணகி வழிபாடு ஈழத்தில் புகுந்தமைபற்றி பல கதைகள் நிலவிவருகிறது. கண்ணகி தன்னை ஐந்து தலை நாகமாக மாற்றி ஊர்ந்து சென்று முதலில் நயினாதீவில் தங்கினாள் என்றும் பின் வட்டுக்கோட்டை சுருட்டுப்பனைவழியாக சீரணி, அங்கணம்மைக்கடவை, அளவெட்டி, சுருவிலில் தங்கினாள் என்றும் அப்பாம்பு நகர்ந்த பாதை வழுக்கையாற்றுப் பள்ளமாக மாறியது எனவும் கூறுவர்.

வழுக்கையாற்றுக்கு அருகிலுள்ள களையோடைக் கண்ணகி அம்மன் ஆலயம் இதற்கு சான்று. சீரணி, அளவெட்டி, சுருவிலுள்ள கோயில்கள் நாகதம்பிரான் ஆலயமாக அழைக்கப்படுகின்றது. மேலும் நயினாதீவிலிருந்து புறப்பட்டு கோப்பாய், மட்டுவில், வேலம்பிராய், கச்சாய் வழியாக சென்று நாகர்கோவிலை அடைந்து பின் புளியம்பொக்கனையை அடைந்து பின் வற்றாப்பளையை அடைந்ததென கூறப்படுகிறது. கண்ணகி வழிபாட்டிற்கு சென்ற கஜபாகு மன்னன் ஜம்புகோளப்பட்டிணத்தில் இறங்கினானெனவும் அதற்கு சான்றாக அங்கணம்மைக் கடவையில் பத்தினிக்கு கோயில் அமைத்தான் எனவும் கூறப்படுகின்றது.

இக்கண்ணகி வழிபாடானது ஈழத்தின் கிழக்குப்பகுதியில் மட்டும் சுமார் இருபத்தைந்து கண்ணகி கோயில்கள் காணப்படுகிறது. இக்கோயில்கள் கரையோரத்திற் காணப்படுவது மற்றோர் சிறப்பம்சமாகும். இவற்றைவைத்து நோக்கும் போது கண்ணகி வழிபாடானது வடபகுதியிலிருந்து வன்னிப்பிரதேசத்தினூடாக அநுராதபுரத்திற்கு சென்றிருக்கலாம் அல்லது மட்டக்களப்பு தமிழகத்தை அடைந்து இருக்கலாம். நேரடியாக தமிழகத்திருந்து ஈழத்தின் கிழக்குக் கரைக்கு அறிமுகமாயும் இருக்கலாம்.

இவ்வாறு தோற்றம்பெற்ற அம்மன் வழிபாடானது சிறப்பும், செழுமையும் பெற்றதை சில உதாரணம் காட்டி விளக்கலாம். முதலில் வட இலங்கையில் மாரியம்மன் வழிபாடும் நன்கு பிரபல்யமாய் இருப்பதை குறிப்பிடலாம். மாரியம்மன், மகாமுத்துமாரி, மாரியம்மை, மகாமாரி,



COURTESY : https://www.himalayanacademy.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைமுத்துமாரி, சிறீமுத்துமாரியம்மன், சிவமுத்துமாரி. எனப் பல பெயர்கள் அடைமொழியுடன் வணங்கப்படுவதைக் காணலாம். இத் தெய்வங்கட்கு பேரிகை, பொங்கல், குளிர்த்தி முதலிய சேர்க்கப்பட்டும், சேராமனும் வழிபாடு இடம்பெற்றது.

காளி எனும் தெய்வம் வீரமாகாளி, காளிகா, பரமேஸ்வரி, சிறீபத்திரகாளி என்னும் பெயர்களில் ஆலயங்களில் வீற்றிருக்கிறாள். நாகேஸ்வரி நாகபூசனி என்னும் பெயரில் நயினாதீவு, சண்டிலிப்பாய், கோண்டாவில், பரந்தனில் புளியம்பொக்கணை, புதூர் பேன்ற இடத்திலும் வீற்றிருப்பதைக் காணலாம். ராஜராஜேஸ்வரி எனும் பெயரில் பலாலி, நாயன்மார்கட்டு, புங்குடுதீவு எனுமிடத்திலும் புவனேஸ்வரி எனும் பெயரில் பலாலி, நாயன்மார்கட்டு, புங்குடுதீவு எனுமிடத்திலும் புவனேஸ்வரி என்னும் பெயரில் ஏழாலை, சுதுமலை, நாவற்குழி, இடைக்காடு முதலிய இடத்திலும் வீற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாச்சிமார் வழிபாடும் ஓரளவு பிரபலியமானதே. நாச்சிமார் புது நாச்சிமார் எனும் பெயரில் நவாலி, கிளான், வேலணை முதலிய இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழிபாடு வன்னிப்பகுதியிலும் நிலவுகிறது. மேலும் இலங்கையில் உள்ள சிவன் கோவில்களில் சிவனுக்கும் அம்மனுக்கும் வெவ்வேறு கோயில்கள் வெவ்வேறு பெயரில் உள்ளது. ஐந்து ஈஸ்வரத்தையும் விட வண்ணை வைத்தீஸ்வரன் நாயகி, புங்குடுதீவு மீனாட்சி, சோமசுந்தரேஸ்வரர் முதலியோரைக் குறிப்பிடலாம்.

இறுதியாக சக்தி வழிபாட்டின் சின்னங்களாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம், வவுனியாவிலுள்ள மாமடுவ, சிகிரியா, இலுக்வேவ போன்ற இடங்களிலும் பொலநறுவை, மாத்தறை, அம்பாறைப் பகுதியிலும் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பாவைகள் பற்றிக்குறிப்பிடல் அவசியமாகிறது. இவ்வுருவங்களில் கல்லில் அமைந்த யக்சி உருவங்களிலோ அல்லது நாணயத்திற் காணப்படும் யக்சி உருவங்களிலோ கலைத்திறன் இல்லை எனலாம். மாறாக கொடூரத்தன்மை உடையதாக இருப்பதோடு உடலுறுப்பும் நேர்த்தியாக சித்தரிக்கப்படவில்லை. இப்பாவைகள் முழுக் களிமண்ணால் செய்யப்பட்டன. சில தலைமட்டும் களிமண்ணால் ஆக்கப்பட்டு உடல் கோறையாக காட்சி தருகின்றன. சிலதின் சொண்டு விகாரமாயுள்ளது. இவற்றை சுதேச மக்களது கலைவண்ணம் எனலாம்.

இவ்வாறு ஈழத்தில் அம்மன் வழிபாடு ஆதியானது. இது மக்கள் மத்தியில் அடிமட்டத்தில் தழைத்திருந்ததை பாளிநூற்குறிப்பு, சுடுமண் பாவைகள், கிராமிய கல்வெட்டுக்குறிப்பு, நாணயங்கள், புடைப்பு சிற்பங்கள் என்பன காட்டி நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

பராசக்தியாகிய அம்பாள் அறக்கருணை மூலமும் மறக்கருணை மூலமும் அருள்செய்ய வல்லவள். அதாவது அன்பின் மூலமும் தண்டித்தல் மூலமும் அருள் செய்வாள். அம்பாள் வழிபாட்டை புராணங்கள் விரிவுபடுத்தின. தேவி பாகவதம் அம்பாளுக்கு முதன்மை கொடுத்து அம்பாளின் பல்வேறு மூர்த்தங்களையும் அவற்றுக்குரிய மந்திரங்களையும் சிறப்பித்தன. பராசக்தியின் வெவ்வேறு தோற்றங்களாக கௌரிமனோன்மணி, சாமுண்டீஸ்வரி, துர்க்கை, மகமாரி என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றுள் மகமாரி மாரகாசுரனை சங்காரம் செய்ததால் அப்பெயர் பெற்றாள் என காரணாகமம் கூறுகின்றது. இவளது தலையைச் சுற்றிலும் அக்கினிச் சுவாலைகள் தோன்றும். கபாலம், சக்தி, பாசம், உடுக்கு என்னும் நான்கு ஆயுதங்களை இவள் ஏந்தி நிற்பாள். இந்த அடிப்படையை கொண்ட முத்துமாரி வழிபாடும் தோன்றியது.

அம்மையே சிவனைப் பூசித்த புராணவரலாறுகள் சிவனையும் சக்தியையும் இணைத்துள்ளதுடன் பிரிவினையை சிவன் வேறு சக்தி வேறு என்ற பேதத்தையும் வேரறுத்தத்து.

அடிக்குறிப்புகள்:

01 - கை. நமச்சிவாயக்குருக்கள் - "அம்மன் வழிபாடு - அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் -பக்.301

02. பேரா. சி.க. சிற்றம்பலம் - "ஈழத்து இந்து சமய வரலாறு - பாகம் 01" யாழ் பல்கலைக்கழகம் - பக். 243, 246-248.

*நன்றி : "பணிப்புலம்" - இணையம்*

**மாமன்றச் செய்தி**

## பொலனறுவை புராதன சிவாலயத்தில் மாமன்றத்தின் மகாசிவராத்திரி வழிபாடுகள்.

பொலனறுவை புராதன சிவாலயத்தில் மகாசிவராத்திரி புனித தினத்தில் விசேட பூசை வழிபாடுகளை பொலனறுவை சமன்பிட்டி , காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றத்தின் தலைவர் திரு. பாலன் சுதாகரன், மாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்திருந்தார்.

இந்நிகழ்வுகளில் மாமன்றப் பிரதிநிதிகளாக, மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், திரு.சி.த.சி.அருளானந்தன், திரு.ஜெ.நிரோஷ்காந் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். விசேட சொற்பொழிவினை சக்தி ஊடகத்தை சார்ந்த திரு. ஐ.கஜமுகன் அவர்கள் நிகழ்த்தினார். மேலும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சீ.யோகேஸ்வரன் அவர்களும் பூசை வழிபாடுகள் மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

பொலனறுவையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளில் மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகளும் வழங்கிவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்கள், சைவர்கள் – முக்கியமாக யாழ்ப்பாணத்தவர்கள்

## *நாவலர் பெருமானை மறக்க முடியாது... மறக்கக் கூடாது.*

(ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான **வரதர்** அவர்கள் எழுதிய "நாவலர்" எனும் நூலிலிருந்து பயன்தரும் வகையில் இங்கு தரப்படுகின்றது..)

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் வாழ்ந்த மக்களுக்கு அத்தியாவசியமாக என்ன செய்யவேண்டியிருந்ததோ அதை நாவலர் செய்தார்.

மகாத்மாகாந்தி ஒரு அவதார புருஷர். அவருடைய காலத்தில் இந்திய மக்களுக்கு எது தேவைப்பட்டதோ அதை அவர் செய்தார்.

நாவலரும் ஒரு அவதார புருஷர். மகாத்மாகாந்தியைப் போலவே தாம் எடுத்துக் கொண்ட பிரசார வேலைகளுக்கும் மேலாக நீதிக்கு இடம் கொடுத்த மகான் அவர் சைவசமயத்தை நீதியின் உருவமென்று கண்டவர் நாவலர். "நமது சமயம் 'வைதீக சமயம்.' வைதீகமாவது வேதநெறி. அதாவது அறிவுநெறி. கருவி கரணங்களை நெறிப்படுத்தி அறிவுத்தூய்மை செய்யும் நெறி. சைவ சமயத்தவன் செய்யத்தக்கது எது, தகாதது எது என்று தர்மவிசாரமுடையவனாய், தனனிலையை உணர்ந்து, நீதி வழுவா நெறிமுறையில் தன் வாழ்க்கையை இட்டு வைத்து பாதுகாத்தற் பாலன்" என்று நாவலருடைய மனக்கருத்தைக் கூறியிருக்கிறார், அவருடைய 'வாரிசு' ஆக, எம்மிடையே விளங்கும் பண்டிதமணி, கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள்.

இம்மட்டோ!

மூடத்தனமான சாதிக் கட்டுப்பாடுகளால் நெரிந்து, புழுங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே,

"சாதியிலும் சமயமே அதிகம். சமயத்திலும் சாதியதிகமென்று கொள்வது சுருதி, யுத்தி அனுபவம் மூன்றிற்கும் முழுமையும் விரோதம்" என்று எக்காலத்திற்கும் ஏற்ற சீர்திருத்தக் கருத்தைக் கூறி நீதி செய்தவர் நாவலர்.

நாவலரைப் போல் நமக்கு ஆளில்லை. - அவருக்கு முன்புமில்லை. பின்பும் இல்லை.

**நாவலரை நாங்கள் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்.**

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுதிகளில் முதலாம் தொகுதியில் பண்டிதமணி, கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலரைப்பற்றி இரத்தினச் சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். இச்சிறிய நூலைச் சிறப்புச் செய்வதற்குக் அந்தக் கட்டுரையையும் தருகின்றேன்.

**கலைக்களஞ்சியத்தில் நாவலர்**

யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வாக்குள்ள சைவ வேளாளக் குடும்பம் ஒன்றில் 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தவர். தந்தை கந்தப்பிள்ளை: தாய் சிவகாமியம்மை. இவர் திண்ணைப்பள்ளியில் படித்த பிறகு 12ம் வயசில் பார்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் ஆங்கிலமும், சேனாதிராய முதலியார் சரவணமுத்துப் புலவர் முதலிய வித்துவான்களிடம் தமிழும் படித்தார். தமது பாடசாலையில் தமிழ், ஆங்கில உபாத்தயாயராகவும் தமக்குத் தமிழ் பண்டிதராகவும் அமர்த்திக் கொண்டு, பைபிளைத் தூய தமிழில் மொழியெர்க்கச் செய்தார். பேர்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் நாவலர் படித்ததும், படிப்பித்ததும் ஏழு வருடங்கள். அவருக்குப் பத்தொன்பது வயசு ஆயிற்று. நாவலரோடு பழகிய பேர்சிவலுக்குத் தாமும் தமிழ் கற்க வேண்டும் என்ற ஆசை உண்டானது. தமக்குத் தமிழ் சொல்லித்த தரும்படி அவர் நாவலரிடம் வேண்டுகோள் விடுத்தார். நாவலர் நிபந்தனைகளுடன் அதற்குச் சம்மதித்தார். தாம் எந்த நேரமும் சவசின்னங்களான விபூதி, உருத்திராக்கம் அணிநிருப்பார் என்பதும், சைவசமயத்தை இழித்துரைப்போரைக் கண்டனம் செய்வதை நிறுத்தமாட்டார் என்பதுமே அவர் நிபந்தனைகள். பேர்சிவல் ஒரு சிரிப்புடன் அந்த நிபந்தனைகளை ஏற்று நாவலரிடம் தமிழ் கற்று வந்தார். நாவலரை விட்டால் அவரைப் போலச் சிறந்த தமழ்பண்டிதர் தமக்குக் கிடைக்க மாட்டார் என்பது ஒரு புறமிருக்க, இந்த ரதிரி நேர்மையும் சுய அபிமானமுள ஒரு உயர்ந்த மனிதரோடு பழகுவதில் அவர் பெரு விருப்பங் கொண்டிருத்தல் வேண்டும். அவர் நல்ல நீதிமான். பேர்சிவல் பாதிரியாருக்கு நாவலர் தமிழ் மொழியைக் கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில் நாவலரிடம் இன்னுமொரு பெரிய வேலையையும் பேர்சிவல் ஒப்படைத்தார். கிறீஸ்தவ வேத நூலாகிய 'பைபிள்' நூலைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற ஆவல் அப்போது தமிழ்க் கிறீஸ்தவர்களிடம் இருந்தது. அந்த மொழி பெயர்ப்பு வேலையைத் திறம்படச் செய்வதற்கு நாவலரை விடச் சிறந்த அறிஞர் வேறு எவரும் இல்லை என்று பேரிசிவல் பாதிரியார் கருதி, அப்பெரும்பணியைச் செய்து தரவேண்டுமென்று நாவலரை வேண்டினார். உள்ளன்போடு தம்மை நேசித்த பேரிசிவல் பாதிரியாரின் வேண்டுகோளை மீறமாட்டாமல் நாவலரும் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

சைவசமயத்தை இழித்துரைத்த பாதிரிமார்களுக்கு நாவலர் விரோதி. ஆனால் கிறீஸ்து சமயத்தின் விரோதியல்லர்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் பைபிளை மொழிபெயர்த்துக் கொண்டிருந்த அதே காலத்தில் தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள கிறீஸ்தவ அறிஞர்களும் பைபிளுக்கு ஒரு தமிழ் மொழிபெயர்ப்புச் செய்துகொண்டிருந்தார்கள்.

நாவலருடைய மொழிபெயர்ப்பு நிறைவு பெற்றதும் அதைச் சென்னையில் உள்ள கிறீஸ்தவ சபையில் காட்டி அங்கீகாரம் பெறுவதற்காகப் பேர்சிவல் அதைச் சென்னைக்கு எடுத்துப் போனார். தம்முடன் நாவலரையும் அழைத்துச் சென்றார். என்னதான் நாவலரின் தமிழ் - ஆங்கில அறிவில் பேரிசிவலுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தபோதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை அறிஞர்களின் மொழிபெயர்ப்புக்கு மேலாகத் தம்முடைய நூலைச் சபையார் எடுத்துக் கொள்வார்களோ என்ற அச்சகம் அவர் மனத்தின் ஒரு பக்கத்தை அரித்துக் கொண்டிருந்தது.

சென்னையில் இருந்த அறிஞர்கள் தங்களுடைய மொழிபெயர்ப்பே சரியானதென்றும், நாவலருடைய மொழிபெயர்ப்பில் தவறுகள் இருப்பதாகவும் வாதிடத் தொடங்கினார்கள். உனவே கிறீஸ்தவ சபையார் இந்த இரண்டு மொழிபெயர்ப்புகளில் எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கும்படி அக்காலத்தில் சிறந்த அறிஞராக விளங்கிய மகாலிங்கையர் என்பவரை நியமித்தார்கள்.

இரண்டு மொழிபெயர்ப்புக்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்த மகாலிங்கையர், நாவலரின் மொழிபெயர்ப்பே மிகச் சிறந்ததெனத் தீர்ப்புச் சொன்னது மட்டுமன்றி 'யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உண்டோ?' என்று ஆச்சரியப்பட்டு வயந்துங் கூறினார். பேரிசிவல் கொண்டு போன நாவலரின் மொழிபெயர்ப்பையே சபையார் ஏற்று அச்சிடுவித்தனர். இதனால் பேர்சிவலின் உள்ளத்தில் நாவலரைப் பற்றிய மதிப்பு மேலும் ஒருபடி உயர்ந்தது.

நாவலர் பைபிளை மொழிபெயர்த்து வருகிற காலத்திலே தமது சமயத்தை உணரவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றச் சைவசித்தாந்த சாஸ்தரங்களையும், திருமுறைகளையும், சமஸ்கிருதத்தையும் கற்றுச் சைவ ஆகமங்களிலே வேண்டி பகுதிகளையும் தாமே கற்றுக் கொண்டார். இளமை தொட்டே கோயில்களிற் புராணங்களுக்குப் பதப்பொருள் கூறி விருத்தியுரை சொல்லுதல், தருக்கித்தல் முதலிய பழக்கங்களும் இவரிடம் இருந்து வந்தன. சைவாநுஷ்டானங்களில் என்றுமே இவர் தவறியதில்லை.

அக்காலத்திலே பாதிரிமார் மதமாற்றத்துக்குக் கையாண்ட முறைகளால் நாவலருக்கு வருத்தம் உண்டாயிற்று அவருடைய வாழ்க்கையே மாறியது. அவர் இல்வாழ்க்கையிற் புகாமல் சமய வளர்ச்சிக்கே உழைக்க வேண்டும் என உறுதி அமைக்க வேண்டும் என்கிற ஊக்கம் நாவலருக்கு வரவரக் கிளர்ந்தது. நாவலர் என்ற பட்டம் 27ம் வயசில் திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கப்பட்டது. இராமநாதபுர சமஸ்தானம் நாவலர் முயற்சிகளுக்கு வலிந்து உதவ முன்வந்தது.

சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் உபயோகமான கருவி நூல் சமய நூல்களின் இன்றியமையாமையை உணர்ந்து புதியனவாக நூல்களை எழுதவும் ஏட்டில் இருந்தவைகளை ஆய்ந்து அச்சிடவும் இவருக்குப் பணிப்பு ஏற்பட்டது. இலங்கைப் பூமி சாஸ்திரம் கூட இவர் எழுதினார். நாவலருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் பதிப்புக்களும் சூழ்நலையின் படிப்படியான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டவை. அக்காரணத்தால் இவர் முயற்சிகளெல்லாம் சிறந்த அடிநிலையிலிருந்து தொடங்கி நடந்தவைகள் எனலாம்.

1. இவர் எழுதிய 1ம் 2ம் 4ம் பாலபாடங்கள், திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், சூசனம் என்பவை ஒரு வகையில் அமைந்திருக்கின்றன.
2. இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை எழுதியதும், நன்னூல் விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியப் பாயிர முதற் சூத்திர விருத்தி, பிரயோக விவேகம், சேனாவரையம், தருக்க சங்கிரகம், நிகண்டு பதிப்பித்ததும் மற்றொருவகை.
3. 1ம் 2ம் சைவ வினாவிடை, நித்திய கருமவிதி, சிவால தரிசனவிதி, புட்பவிதி, சிதம்பர மான்மியம், சைவசமய நெறியுரை, கோயிற்புராண உரை, திருமுருகாற்றுப்படை உரை எழுதியதும் சிவஞானபோதச் சிற்றுரை, பதினோராம் திருமுறை, திருவாசகம், அகத்தியர் தேவாரத் திரட்டு பதிப்பித்ததும் வேறொருவகை.
4. பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை ஆகிய பதிப்புக்கள் வேறொரு வரிசை.

**" பர்சிவல் பாதிரியாரின் கோட்டைக்குள் புகுந்து கிறிஸ்தவரின் நடவடிக்கைகளை நன்கு அறிந்த, அறிவும் வயசும் வளர்ந்த ஆறுமுகத்துக்குள்ளே அப்பொழுதே 'நாவலர்' உருவம் கொள்ளத் தொடங்கியது. நாவலருடைய சுய அபிமானம் வீறிட்டு எழுந்தது. தம்முடைய மக்களுக்குச் செய்யப்படும் அநீதி கண்டு அவருடைய நெஞ்சு கொதித்தது...."**

செய்து கொண்டார். 24ம் வயசின் தொடக்கத்தில் மாணவர் சிலரைச் சேர்த்துச் சம்பளம் பெறாமல் இராக்காலங்களில் சமய நூல்களையும் கருவி நூல்களையும் படிப்பிக்கத் தொடங்கினார். 25ம் வயசில் வெள்ளிக்கிழமை தோறும் பெருந்திரளானவர்களுக்குச் சமயச் சொற்பொழிவு செய்து வந்தார். பின்னர் தமது உத்தியோகத்தை விடுத்து 26ம் வயதில் யாழ்ப்பாண நகரத்தில் சைவப்பிரகாச வித்தியாலயத்தை ஸ்தாபித்தார். இவருடைய மாணவாகளே ஆசிரியர்கள் ஆனார்கள். மருமகரும் மாணவருமான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை பாடஞ் சொல்வதிலேயே காலங் கழித்தார். சபாபதி சநாவலரும் இவருடைய மாணவர்களிற் சிறநதவர். தமிழ்நாடு முழுவதிலும், சிதமபரம் முதலிய முக்கியத் தலங்கள் தோறும் சைவ வித்தியாசாலைகள்

5. சைவதூஷண பாகாரம், சுப்பிரபோதம், மித்தியவாத நிரசனம் முதலிய கண்டன நூல்கள் எழுதியது ஒருவகை. மேலும் சமூக அரசியற பிரச்சனைகளில் ஈடுபட்டுக் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள் , கண்டனங்கள் மிகப் பல. அவற்றுட் சில 'நாவலர் பிரபந்தம் ' என்ற பெரில் வெளி வந்திருக்கின்றன.இவர் இயற்றி கீர்த்தனங்களும் பாடல்களும் சில உண்டு. எணிணறந்த பிரசங்கங்களும் புராண வியாக்கியானங்களும் இவர் செய்தவை எழுதப்படவே இல்லை.

தமிழ் உரைநடை ஆறுமுகநாவலரால் ஒரு வகைத் திருத்தமும் அழகும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழன்னையின் ஓர் ஒப்பற்ற குழந்தை

# சுவாமி விபுலானந்தர்



சுவாமி விபுலானந்தர் யாழ்ப்பாணத்துத் தோன்றல் இலங்கைச் செல்வம். அவர் தமிழிலுங் கலைஞர் ஆங்கிலத்திலுங் கலைஞர். அவர் தம் கலைமணம் அவரது பேச்சிலும் எழுத்திலும் கமழ்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் தமிழ்ப் பேராசிரிய ராயிருந்தவர். இம் முயற்சி பண்டைத் தமிழர் கண்ட யாழை மீண்டும் உயிர்ப்பிக்க ஊக்கியது. பண்டைத்தமிழிசையின் பெருமையையும் தனித்த இயல்பையும் எடுத்துக்காட்டும் வகையில் "யாழ் நூல்" என்னும் அரிய இசையாராய்ச்சி நூலை ஆக்கியுள்ளார். சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் இவர் வல்லவர்.

சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 27-03-1892 இல் சாமித்தம்பி, கண்ணம்மையார் தம்பதிகளுக்கு பிறந்தார்.

இவருடைய ஆரம்பக் கல்வி கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் இடம்பெற்றது. ஊயஅடிசனைபந ளுநஉழைச பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்து, அதன் பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டைய தமிழ் இலக்கியத்தைக் கற்றார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1912ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழிநுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916இல் விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோற்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே.

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் இரசாயன உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய டீளுஉ தேர்வில் தோற்றி சித்தியடைந்தார். மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும், திருப்புகழ், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

மனத்தை ஈர்ந்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி, இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார், மயில்வாகனன். சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும், சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய இராமகிருஷ்ண விஜயம் என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும், ஏநனயவெய முநளயசை என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதத பரீட்சையின் பரீட்சார்த்தகராக நியமிக்கப்பட்டார். தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழ் எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரைகள், 'மதங்க சூளாமணி' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் சுவாமி விபுலாநந்தர் என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின் படி, சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில் தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது. புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1934 ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்தி விலகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை திரும்பிய அடிகளார், இங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இராமகிருஷ்ண மிஷன் இமயமலைப் பகுதியில் உள்ள Almorah என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் 'பிரபுத்த பாரத' **(Prabuddha Bharatha)** என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அப்போது தான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப் பெற்று, அரிய நூலாகிய 'யாழ் நூல்' உருவாக்கம் பெற்றது.

1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்லவேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலாநந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.

யாழ்நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் உடல் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார். சுவாமி அவர்களின் பூதவுடல், சுவாமி அவர்கள் கண்ணும் கருத்துமாக உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

ஈழநாட்டிற் பிறந்தேனாயினும் ஈழத்து வழக்குத் தமிழில் எனக்கு அதிகப் பழக்கமில்லை. கற்றது புத்தகத் தமிழ். கலந்து பழகி ஒரு சிறிது பயின்று கொண்டது சோழ நாட்டுத் தமிழ். இலங்கையிலே நான் நண்பரோடு உரையாடும் போது, என் உரையைக் கேட்டார்." சாமி பேசுவது வடக்கத்திய தமிழ்" என்று சொல்ல நான் பலமுறை கேட்டதுண்டு. இலங்கையிலுள்ளோர் தென்னாட்டுத் தமிழரை "வடக்கத்தியார்" என்பது வழக்கம். தென்னாடு ஈழத்திற்கு வடநாடுதானே? இஃது இப்படியிருக்க ஒருநாள் சென்னை ஜார்ஜ் டவுனிலே ஒரு கடைக்காரன் என்னை நோக்கி, "சாமிக்கு ஊர் பாலைக் காடா?" என்று வினாவியதுண்டு.

*நன்றி - "கலைமகள் கதம்பம்"*



## மாமன்ற வரலாற்றில் பொற்காலம் படைத்த நாயகன்!

# மனிதநேய மாமனிதர்!

## மனிதநேயமாமணி திரு. வி. கயிலாசபிள்ளை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக 1992 முதல் 2014 வரை பதவிவகித்து அதன்பின் இறுதி மூச்சுவரை மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவராக விளங்கிய மனிதநேயர் திரு. வி. கயிலாசபிள்ளை, 19-02-2017ல் இறையடியெய்தினார். அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு மாமன்றத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அமரரின் நினைவு அஞ்சலி நிகழ்வு எதிர்வரும் **26-03-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்** நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அச்சமயம் மாமன்றத்திற்கு ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கிய அமரரின் ஞாபகார்த்தமாக சிறப்பு 'இந்து ஒளி" வெளியிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Worshipping the 'Theepam'



### The qualities of the Lamp

The lamp used for pooja should be made of brass copper or silver. There is a mixture of iron in eversilver so it should not be used. Using lamp made of iron leads one to destitution and poverty. Now in most homes stainless steel lamps are used. This should be avoided. Those who cannot afford to buy brass lamps may use clay lamps. Nothing is wrong with it.

### The effects of using the blessed lamp

There should be five wicks in each lamp. It is good to light the five wicks. For daily worship one wick is good enough. Ghee is the best fuel to be used. By using ghee the clan will prosper. Using of gingelly is special for worship of Maha Luxmi, Vishnu and Saturn. Coconut oil is special for worship of Vinayaga. Olive oil is as good as ghee.

The wick should be made out of cotton wool/using the fibres of the lotus stem is of a great value. Flowers can be kept at the bottom of the lamp or at the base of the lamp. Keeping flowers on top of the lamp may cause the petals to be burnt. Now-a-days the lamp lighting at functions is on the programme. This is referred to as lighting the "Mangala Vilakku". Not only that but also a long list of names is read out, to light the lamp.

When lighting the lamp the foot-wear should be removed. Using a lighted candle is taboo and lighting the lamp with hair loose should be avoided. Around the lamp is drawn a design called "Kolam". A kumkum (red) dot is put on the lamp and decorating it with flowers is auspicious.

The worthy lamp denotes Maha Luxmi. So it must be considered very very sacred. In the mornings and evenings women in clean clothes draw the "Kolam" out of rice flour and keep the lamp on it and decorate it with sandal paste and kumkum and keep a flower at the foot of the lamp and light it (the lamp).

In the ancient Sanga period books, it is pointed out that in the evenings paddy and flower are strewn over it and the lamp is lit and worshipped. It is also pointed out that the women worshipped their family deity. Wherever the rays of light of lamp fall, there will be no poverty, illness or trouble. Instead there would be good health and prosperity. It is good to chant familiar "Thevarams" (Religious songs) while lighting the lamp.

1. "இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

illaka vi'lakkathu viru'lke duppathu
sollaka vi'lakkathu soathi yu'l'lathu
pallaka vi'lakkathu palarung kaa'npathu
:nallaka vi'lakkathu :namassi vaayavae.

Translation:
*it is inner light inside the body.*
*destroys ignorance elucidates the meaning of words which are inside them.*
*has the light divine.*
*as the souls are innumerable, lights them internally.*
*it stands to be seen by all religionists without their knowledge.*
*it is the lamp that shines inside the form of spiritual knowledge that mantiram is namaccivāya.*

*Translation: V.M.Subramanya Aiyar–Courtesy: French Institute of Pondichery / EFEO (2006)*

2. சீலத் திருவிளக்கே சீதேவி லக்ஷ்மியே
கோலத் திருவிளக்கே கும்பிட்டேன் நின்னடியே
தில்லை வன நாதனும் சிவகாமி அம்மையையும்
சிந்தையில் கொண்டிருக்க செய்தவினை நீங்கிவிடும்
தந்தை தமர் தாய். சார்ந்த குரு அரசும் சிந்தை மகிழ்வாழ்வை
தேவியே செய்தருள்வாய்.
தொட்டிலுக்குப் பிள்ளையும் தொழுவிற்குப் பால் பசுவும்
பட்டறைக்கு நெல்லும் பதிந்த மரக்காலும்
உனக்கெரிக்க எண்ணையும் எனக்குண்ணச் சோறும்
தட்டாமல் தாயே தந்தருள்வாய் தகவுறவே
அரியவினை தீர்க்கும் ஆனைமுகத்தோனே
அல்ரி சண்பகம் கதலி முக்கனி ஆனபடி படைத்தேன்
அன்பின் மணிவாசகத்தை ஞானம் பெறவே
நயந்தோதினேன் அருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி மணிவிளக்கே ஸ்ரீ தேவிப் பெண்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத்திரி போட்டு
குளம்போல நெய்விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்.
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடி விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு
மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறைய பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பால்ப் பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா.

4. தரிசனம் காணல்:-
சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடங் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப் பச்சை மாலை கண்டேன்
சவுரி முடிகண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்

பின்னலழகு கண்டேன் பிறை போல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவங் கண்டேன்
கமலத் திருமுகத்தில் கத;தூரிப் பொட்டு கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தேன்
அடியாள் நான்

அன்னையே! அருந்துணையே! அருகிலிருந்து காருமம்மா!
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாராம் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

## The ways of lighting the lamp and the philosophy contained therein

When a girl gets married and goes to her husband's home people say she is going to light the lamp in that house. There are five sides of the lamp each depicts the quality expected of a woman :-

1. Patience
2. Tolerance
3. Make concessions
4. Presence mind
5. To be firm for a good cause

These qualities would make life happy and joyful. Do not let the lamp go off by itself. Use a flower to put it off. But never blow it off or put it off by fanning with a hand.

There are certain good words to put off the flame. "Lower the flame" "Cool the lamp" "Make it bright" are the good words to be used. Instead of saying "pick up the lamp and keep it" say "move the lamp to a side".

The lamp lit in the house is Goddess Luxmy's Grace. At 6 o'clock close the back door, open the front door sprinkle water at the entrance make a design kolam and light the lamp. The meaning of this action is Goddess Luxmy who enters by the front door should not leave by the back door. After lighting the lamp the back door can be opened. The Luxmy or the lamp lights up the home.

### The directions faced by the lamp

1. East – Sorrows will disappear. Illnesses will be cured. Will become prosperous
2. West – The ill effects of the planets will be nullified. Enmity disappears.
3. North – Treasures, wealth acquired, auspiciousness
4. South – The lamp facing the south should not be lit

This is the reason why the sastras forbid building the shrine room facing south.

| | |
|---|---|
| The lamp lit during pooja - | Ordinary lamp |
| The lamp lit forever - | Nantha lamp |

The lamp lit during morning and evening- Santhi lamp

### The effects of the wicks

Using wicks made out of the fibres of the lotus stem will nullify the sins of birth.

Using wicks made from the fibres of the banana sheath will redeem the wrong done against the family deity and remove the curse.

Using wicks made from new cloth soaked in scented water and dried – Goddess Luxmy's Grace bestowed.

Using wicks out of red cloth – obstruction for marriage removed, will be blessed with children.

Suitable oils to be used for the lamp

1. Ghee - Increase of wealth, welfare ascertained. It is traditional to use ghee to light a lamp in the temple for God Muruga.
2. Gingerly - All illness will disappear, no fear of death
3. Olive Oil - Good health
4. Castor Oil - Blessed with good fortune
5. The five types of oils namely ghee, margossa oil, castor oil, olive oil and coconut oil should be mixed and used for the lamp, and lit for 45 days.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This will bestow complete grace on one.
(Using peanut oil is taboo)

**Types of Lamps**

1. Out of bell metal (Venkalam) – sins absolved
2. Out of iron – Lord Saturn likes iron lamps to be lit on Saturdays
3. Out of clay – Makes one firm and vigorous
4. Out of silver or out of the five metals gold silver, brass, iron and copper will bring great glory to the user

The effects of lighting the lamp according to the number of wicks.

1. If one is lit – average results
2. If two are lit – family unity ensured
3. If three are lit – blessed with children
4. If five are lit- become prosperous, wealthy
   (On the festival days all five should be lit)

**The lamp**

1. will dispel the darkness within
2. create good thoughts
3. make many good thoughts shine within
4. good qualities and benefits will increase
5. absolves sins

*(This is Chapter 17 from Compendium fo Hindus published by All Ceylon Hindu Congress)*





☞ வழிபாட்டியல் ☞ வாழ்வியல்
☞ கிரியையியல் ☞ விரதவியல் ☞ சிராத்தவியல்
☞ ஆசௌசவியல் ☞ தத்துவ இயல் ☞ திருமுறையியல்
என ஒவ்வொரு இந்துவினதும் நாளாந்த வாழ்க்கையில்
பின்னிப்பிணைந்துள்ள வாழ்வியல் முறைமைகளின் எளிமையான
சுருக்கமான தெளிவான விளக்கங்கள் அடங்கிய கையேடு.
மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தமது சந்தேகங்களை தீர்க்கும்
வழிகாட்டியாகவும் கலைக்களஞ்சியமாகவும் திகழும்

**'இந்து மக்களுக்கு ஒரு கையேடு'**

**மற்றும் இக்கையேட்டின் ஆங்கில மொழிபெயர்ப்பான**

# 'The Compendium For Hindus'







**2017 தை முதல் 2018 பங்குனி வரையிலான காலப்பகுதிக்குரிய**

**திருக்கணித - வாக்கிய பஞ்சாங்கங்களின்**

**சுருக்கத் தொகுப்பு**

**செயலகம் :**
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டிணர் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி : 0112 43 990 தொலை நகல்: 0112 344 720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை:** 211/17, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1075 தொலைநகல்: 021 221 7280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுசரணையாளர்கள்


**ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**

**அமரர் திரு துரையப்பா பத்மநாதன்**
750A, மந்தண்டாவளை
மாத்தளை

**அமரர்கள் திரு. திருமதி கரு. பொன்னுசாமி செட்டியார்**

**திரு V. சர்வானந்தா**
மணமகள் பென்சி
612A, பிரதான வீதி, மாத்தளை
066 2222075, 075 5760500

**திரு V. சுதர்ஷன்**
360A, மாஸ்டர் எக்கவுண்டன்சி சேர்விஸ்
பிரதான வீதி, மாத்தளை
0774114101, 066 2230905

**திரு ஏ. முருகானந்தம்**
மயூரா ஜ்வலர்ஸ்
259, பிரதான வீதி, மாத்தளை
0777253220

**திரு R. தர்மராஜா**
ராஜா ஷ்டோர்ஸ்
ராஜா வீதி, மாத்தளை

**திரு S. கேசவன்**
K. பெஷன்
722, திருகோணமலை வீதி, மாத்தளை
0662224185


# இந்தச் சுடரில்...


- பஞ்சபுராணம் 1
- ஆசிச்செய்திகள்
  - நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி 3
  - ஆன்மீகச்சுடரின் ஆசிச்செய்தி 3
  - ஆலய பிரதம சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி 4
  - நிர்வாகசபையின் ஆசிச்செய்தி 4
- முத்துமாரி அம்மை பேரில் ஊஞ்சல் 5
- அன்னபூரணி தேவி 6
- தீர்த்தமாடும் திருநாளாம் மாசிமகம் 8
- மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வரலாறு 9
- அன்னை முத்துமாரி 11
- பங்குனி மாத விரதங்கள் 12
- "இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு" 13
- ஸ்ரீசக்ரம் 14
- 64 சக்தி பீடங்கள் 15
- மனிதனின் ஆறு எதிரிகள் 16
- ராகுகால துர்க்கை அம்மன் வழிபாட்டு முறைகள் 17
- ஈழவரலாற்றில் அம்மன் வழிபாடு 18
- நாவலர் பக்கம் 21
- சுவாமி விபுலானந்தர் 23
- Worshipping the 'Theepam' 25





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 8வது ஆண்டு நிறைவு “ஆன்மீக எழுச்சி விழா” கடந்த 28-01-2017 அன்று மாமன்றத்தின் அனுசரணையில் நடைபெற்றது.**


மாமன்றப் பிரதிநிதிகள் வரவேற்கப்படுகின்றனர்


ஆரம்ப உரை - மன்றத் தலைவர் திரு.இராஜேந்திரன்


ஆன்மீகச்சுடரின் அருட்பேருரை


இந்து ஒளி 2வது ஆண்டுச் சிறப்பிதழை பெற்றுக்கொள்ளும் பாடசாலை அதிபர் திரு. முத்தையா




மாணவ மாணவியர் வழங்கிய கலைநிகழ்வுகள்

**பொலனறுவை புராதன சிவாலயத்தில் மாமன்றத்தின் சிவராத்திரி நிகழ்வுகள் 24-02-2017**


பொலனறுவை சிவன் ஆலய சோழர் கால மூலவர்


கலந்து கொண்ட சிவதொண்டர் அணியினரில் ஒரு பகுதியினர்


நிகழ்வுகளில் கலந்து கொண்ட வெளிநாட்டவர் உட்பட மாமன்றப்பிரதிநிதிகளும் சிவதொண்டர் அணிகளும்


கௌரவ பாரளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தலைமையில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட வெளிநாட்டவர் ‘சிவதொண்டர அணியில் ’ இணைந்துகொண்டபோது


சிவதொண்டர் அணி மாணவருக்கான கல்வி உதவி புலமைப்பரிசில் சி.த.சி. அருளானந்தன், சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது


கலை நிகழ்ச்சிகளை வழங்கிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/55/NEWS/2017

## மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நிகழ்வுகளின் நிழல்கள் சில...

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.